பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.u·ha··n.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை06 திங்கட்கிழமை (19.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:054

# விசுவமடுவில் ஷெல்வீச்சில் 9 பேர் துடிதுடித்துப் பலி! அவர்களில் 6 பேர் ஒரே குடும்பத்தினர்; 33 பேர் காயம்!!

கொழும்பு, ஜன.19

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடுப் பகுதியில் படையினர் நேற்று நடத்திய அகோர ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 மாதக் குழந்தையும் 2 சிறுவர்களுமாக 6 பேர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 33 பேர் படுகாயமடைந்துள்ளனர் என இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

விசுவமடுவில் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 9 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 33 பேர் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் கைக்குழந்தையும் 6 சிறுவர்களும் அடங்குவர். காயமடைந்தவர்களில் 14 மாதக் குழந்தையும் ஒன்றரை வயதுக் குழந்தையும் உட்பட 6 சிறுவர்களும் அடங்குவர்.

கறுப்பையா பெருமாள் (வயது - 49), பெருமாள் இந்திரா (வயது - 40), பெருமாள் சிந்துஜா (வயது - 15), பெருமாள் துசியந்தி (வயது - 09), பெருமாள் தர்மினி (வயது - 08), பெருமாள் கயல்விழி (08 மாதக் குழந்தை), சோமசுந்தரம் உதயகுமார் (வயது - 45), ரகுநாதன் கீர்த்தனா (வயது - 10), தங்கராசா தவக்குமார் (வயது - 14) ஆகியோரே மரணமானவர்கள் ஆவார்.



தமிழினி (14 மாதங்கள்), பிரான்சிகா (ஒன்றரை வயது), யதுசன் (வயது - 07), மதிவாணி (வயது - 08), இ.இளநிலா (வயது - 10), மதிவண்ணன் (வயது - 11), (16 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் முடிவடைந்த பின்னரே அரசியல் தீர்வுக்கான நகர்வு

## இந்தியாவிடம் திட்டவட்டமாக இலங்கை தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 19

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் முற்றாக நிறைவடைந்த பின்னரே, தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பான நகர்வுகள் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை அரசு இந்தியாவிடம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது.

கடந்த வார இறுதியில் கொழும்பு வந்திருந்த இந்திய வெளியுறவுச் செயலர் சிவ்சங்கர் மேனனிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அரசின் இந்த உறுதியான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார் என்று இந்திய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தைமேற்கொண்ட இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கண்டியில் நடந்த சந்திப்பின் போது இது குறித்து தெரிவிக்கப்பட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

(02 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் சூட்டுச் சம்பவம் மூன்றுபேர் பலி!

கொழும்பு, ஜன.19

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்திலுள்ள மல்லிகைத்தீவில் நேற்முன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சிவில் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவர்கள் உழவு இயந்திரமொன்றில் பயணம் செய்து கொண்டிருந்தவேளை பதுங்கியிருந்த நபர்களினால் இந்த துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படுகின்றது.(16 ஆம் பக்கம் பார்க்க)

## உடல்நிலை மிகவும் பாதிப்புற்றதால் நேற்று மாலை உண்ணாவிரதத்தைக் கைவிட்டார் திருமாவளவன்

சென்னை, ஜன.19



இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தக் கோரி சென்னையை அடுத்த மறைமலை நகரில் கடந்த நான்கு நாள்களாக தாம் மேற்கொண்டுவந்த உண்ணாவிரதப் போராட்டத்தை விடுதலைச் சிறுதைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் நேற்று மாலை முடித்துக்கொண்டார்.

இவரின் போராட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் மருத்துவர் இராமதாஸ் பழச்சாறு கொடுத் முடித்து வைத்தார்.

கடந்த வியாழக்கிழமை காலை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கிய திருமாவளவன் தொடர்ந்து நான்கு(16 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் குறித்து சிவ்சங்கர் எம்மிடம் எதுவுமே பேசவில்லை!

### இப்படிக் கூறுகிறார் ரோஹித

கொழும்பு, ஜன.19

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் இந்நாட்டில் தற்பொழுது நடைபெற்றுவரும் யுத்தத்தை நிறுத்தும்படியோ - யுத்தநிறுத்த விடயம் சம்பந்தமாகவோ எதுவுமே எம்மிடம் பேசவில்லை.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புதன்கிழமை கொழும்பு வருகிறார் ஆகாஷி; வன்னி அகதிகளின் நிலைமை குறித்து கவனம் செலுத்துவார்

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்கு இவ்வாரம் விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜப்பானின் விசேட சமாதானப் பிரதிநிதி யசூஷி அகாஷி இங்குள்ள மனித உரிமை நிலைமைகள் தொடர்பாகவும் வன்னியில் மோதல்கள் காரணமாக இடம்பெயர்ந்தோர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்தும் விசேட கவனம் செலுத்துவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இன்று போராட்டம்

### ஐ.தே.க. காலியில்; ஜே.வி.பி. நுகேகொடயில்

கொழும்பு, ஜன. 19

'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் கொலையைக் கண்டித்தும் ஊடகங்கள் மீது மேற்கொள்ளப்படும் பல்வேறுபட்ட அடக்குமுறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இன்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் வெவ்வேறு போராட்டங்களை நடத்துகின்றன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## எம்.ரீ.வி. செய்தி இயக்குநரை சீ.ஐ.டியினர் தேடி வலைவீச்சு!

கொழும்பு, ஜன.19,

எம்.ரீ.வியின் செய்தி இயக்குநர் செவான் டானியலிடமிருந்து வாக்குமூலமொன்றைப் பெறுவதற்காக அவரைத் தாங்கள் தேடி வருகின்றனர் எனக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

செவான் டானியலைக் கண்டுபிடித்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதுக்குடியிருப்பில் சனிக்கிழமை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் அப்பாவி மக்கள் 4 பேர் பலி

கொழும்பு, ஜன. 19

விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டில் உள்ள முல்லைத்தீவு, புதுக் குடியிருப்பு மற்றும் விசுவமடுப் பகுதிகள் மீது நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதல் களில் நால்வர் கொல்லப்பட்டனர்.

மேலும் நான்கு சிறுவர்கள் உட்படப் 11 பேர்வரை படுகாயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டன.

காயமடைந்தவர்கள் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அருள் சிறிதரன் சரண்யா (வயது - 06), சிறிரஞ்சன் சிந்துஜா(வயது - 08), சிறிரஞ்சன் மிதுசன் (வயது - 10), விம லநாதன் ரஞ்சிதா (வயது - 15), அருள் சிறிதரன் சசிகலா (வயது - 24), அந்திரோஸ் இனற் றோசனி (வயது - 25), புண்ணிய சிங்கம் கருணாகரன் (வயது - 25), கார்த்தி கேசு கவிதாசன்(வயது - 30), ஞானேஸ் வரன் ஞானசீலன் (வயது -37), மகேஸ் வரி ரேவதி (வயது - 38) மற்றும்வேலுசாமி நாதன் (வயது - 44) ஆகியோரே படு காயமடைந்தவர்கள் என்று அந்தச் செய் திகளில் பெயர்கள் குறிப்பிடப்பட்டி ருந்தன. (அ-சி)

## குடாநாட்டுக்கு இடம்பெயர்ந்து வரும் மக்கள் சொந்த இடங்களில் விரைவில் குடியமர்த்தப்படுவர்

### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம் பெயர்ந்து வரும் மக்கள் அவர்களது சொந்த இடங்களில் விரைவில் குடியமர்த்தப்படுவர்.

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சரும் வட மாகாணத்துக் கான விசேட செயலணித் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்த நிலையில் தற்போது யாழ்ப்பாணம் வந்திருக் கும் மக்கள் தற்காலிகமாகத் தங்குவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் வரும் மக்கள் தொகைக்கேற்ப தங்கு மிட ஏற்பாடுகள் விஸ்தரிக்கப்படும். இம் மக்களது அடிப்படைத் தேவைகள் குறித்து தொடர்ந்து அவதானித்து உரிய நடவடிக் கைகள் எடுக்கப்படுகின்றன. வெகு விரைவில் இம் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடிய மர்த்து வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றேன் - என்றும் அமைச்சர் கூறினார்.

யாழ்.வரும் மக்களின் ஏனைய தேவை களை பூர்த்திசெய்யும் முகமாக, உதவ முன்வரக்கூடிய சர்வதேச மற்றும் உள் நாட்டுத் தொண்டு நிறுவனங்களுட னும், வர்த்தக மற்றும் ஏனைய தரப்பினருடனும் கலந்து ரையாடப்பட்டு விவரங்கள் திரட் டப்பட்டு வருவதாகவும் கூடிய விரைவில் இம் மக்களுக்கான இயல்பு வாழக்கை உரு வாக்கிக் கொடுக்கப்படும் எனவும் அமைச் சர் நம்பிக்கை வெளியிட்டார். (அ-1)

## லயன்ஸ் கழக நிதியில் அமைக்கப்பட்ட திட்டங்கள் இன்று திறக்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை அலகின் நவீன உபகரண வசதியுடனான பிரிவையும், வடமராட் சியில் நான்கு இடங்களில் அமைக்கப் பட்ட சுனாமி வீடமைப்புத் திட்டங்களை யும் லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் தலைவரும் கொமர்ஷல் வங்கியின் தலைவருமான லயன் மகேந் திர அமரசூரிய இன்று திறந்து வைக்கிறார்.

யாழ். போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவு இன்று மு.ப. 11 மணிக் கும், வடமராட்சியில் அமைக்கப்பட்ட சுனாமி வீடமைப்புத் திட்டங்கள் பிறபகல் 3 மணிக்கும் திறந்து வைகக்கப்படும். (அ)

(சிறப்பிதழ் 8 ஆம் 9 ஆம் பக்கங்களில்)

## யுத்தம் முடிவடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவருக்கும் இடையிலான பேச்சுகளில் இவ்விடயமே முக்கியத்துவம் பெற்றுள்ளது. மாகாணங்களுக்கு மேலும் அதி காரங்களை வழங்குவதற்காக அரசமைப்பின் 13 ஆவது திருத் தத்தை தனது அரசு நடைமுறைப்படுத்தும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமையை இந்தியா கருத்தில் கொண்டுள்ளது என்று புதுடில்லி வட் டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இலங்கையில் பேச்சுகள் மூலமான அரசியல் தீர்வைக் காண்பதற்கான செயற் பாடுகள் துரிதப்படுத்தப்பட வேண்டு மென வெளிவிவகாரச் செயலாளர் வலி யுறுத்தினார் என்று இந்திய வெளிவிவ கார அமைச்சகப் பேச்சாளர் குறிப்பிட்டுள் ளார்.

**ஐக்கிய இலங்கைக்குள்ளான அரசியல்தீர்வு**

தமிழ் மக்கள் உட்பட சகல சமூகத்தின ரும் அமைதியுடனும் கௌரவத்துடனும் வாழக்கூடிய அரசியல் தீர்வை ஐக்கிய இலங்கை என்ற கட்டமைப்பிற்குள் காண வேண்டும் என்றும் சிவ்சங்கர் மேனன் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

இலங்கையின் வடபகுதியில் காணப் படும் மனிதாபிமான நிலைவரம் குறித்த இந்தியாவின் கரிசனையையும் மேனன் தெரிவித்தார். உள்நாட்டில் இடம்பெயர்ந் தவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இதேவேளை, மேனனின் இலங்கை விஜயம் தொடர்பாக கொழும்புக்கான இந்தியத் தூதரகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலும் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் பேச்சுகள் மூலமாக அரசியல் தீர்வைக் காண் பதற்கான நடவ டிக்கை களைத் துரி தப்படுத்த வேண் டியதன் அவசி யத்தை வலியுறுத் தினார் எனத் தெரி விக்கப்பட்டுள் ளது.

அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தை முழுமை யாக நடை முறைப் படுத்தி மாகாணங் களுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவதென இலங்கை அரசு வழங்கிய உறுதி மொழியை மேனன் வரவேற் றார் எனவும் தூதரகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

தொடரும் மோதலின் காரண மாகப் பொதுமக் களுக்கு உயிரிழப் புகள் ஏற்படுவதைத் தடுப்பதன் முக் கியத்துவத்தை மேனன் வலியுறுத் தினார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ-சி)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



லயன்

**K.P.ஆனந்த நடேசன்**

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளராகப் பணியாற்றிப் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்றரக் கிளை முகா மையாளராகப் பதவியேற் றுள்ள லயன் ஆனந்த நடே சன் அவர்கள் மேலும் பதவி உயர்வுகள் பெறவும் பணி கள் சிறக்கவும் மனதார வாழ்த் துகின்றோம்.

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர்.

Quantity Surveying & Building Economics

edexcel INTERNATIONAL Higher National Diploma in

Quantity Surveying

Build Your Future In the Fastest Growing Industry

Approved by Institute of Quantity Surveyors in Sri Lanka

New batch starts on 23.01.2009 at 10 am

More Information: 021 222 8060

ஓர் அற்புதமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

▸ Progressions

HND in Quantity Surveying is a premium qualification to establish a career in Quantity Surveying/Cost management/Project management.

Provides the direct entry into BSc (Hons.) in Quantity Surveying Degree from the University of Salford, UK. University of Salford is the highest rated, 6* premier institute and a partner institution with the RICS (Royal Institution of Chartered Surveyors - UK)

Unique Features of this Course

- State-of-the-art learning facilities
- Well qualified lecture panel
- Well structured course content
- Modular Based Learning System
- Industrial training from the best Construction Companies in Sri Lanka
- Industry focused training method




IIS CITY CAMPUS.

#200,Sivan Pannai Road,Jaffna.

Tel:021 222 8060 Fax:021 222 6933



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை

செல்வி க.அருள்தேவி அவர்களின்

அன்புத் தாய்

**சிவபாக்கியம் கனகசபை**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக் கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்ப துடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டு கின்றோம்

*ஆசிரியர் கழகம்,*

யா/ அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலை, அச்செழு.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் ஸ்ரீவைகுந்தநாதன்



கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமா கவும் கொண்ட ஆறுமுகம் ஸ்ரீவைகுந்தநாதன் 17.01.2009 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறு முகம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசையா மற்றும் ராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் கோகிலாம்பாளின் அன்புக் கணவரும் ரமணனின் (2009 கலைப்பிரிவு மாணவன், புனித பத்திரிசியார் கல்லூரி) அன்புத் தந்தையும் சிவலோகநாதன், இந்திராணி, ஸ்ரீ பத்மநாதன், ஸ்ரீ செந்தில்நாதன், கமலராணி, ஸ்ரீகாந்தநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயகுமார் (யாழ். ப.நோ.கூ.சங்கம்), குகதாஸன் (இனா -பிரான்ஸ்), ரவீந்திரன், தியாகராசா, நாகேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2009)திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக துண்டி மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.18, விபுலானந்தர் வீதி,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி, மகள்.

### திருமதி கனகசபாபதி கனகேஸ்வரி



சுன்னாகம் தெற்கு, காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் கனகசபாபதியின் அன்பு மனைவி கனகேஸ்வரி 16.01.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னம்மா தம்பதி யரின் மகளும், காலஞ்சென்றவர்களான மூளாய் வீரவாகு-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கஜமுகன் (சவுதி அரேபியா), ஜெயமுகன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான ஐங்கரன், ஞானகரன் மற்றும் அம்பிகா ஆகியோரின் அன்புத் தாயாரும், சரோஜினிதேவி, ஜெயந்தினி ஆகியோரின் மாமி யாரும், தனுஷா, குகதீஷா, பிரணவி, பிரிந்தவி ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற் றும் இராசரத்தினம், துரைசிங்கம், கமலாதேவி ஆகியோ ரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2009) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயா னத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*வங்கி லேன்,*
*சுன்னாகம் தெற்கு.*

தகவல்:
கஜமுகன், ஜெயமுகன்
(பிள்ளைகள்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மத்திய அரசு ஏதும் செய்யும் என இன்னுமா நம்புகிறார் தமிழக முதல்வர்?

அண்மைக்கால தமிழ் சினிமாவில் ஒரு காட்சி. வெற்று வாயால் வெட்டி வீழ்த்தி வாய்ச்சவடால் பண்ணும் நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் எடுப்புகளைப் பார்த்து ஊர் மக்கள் அசந்துபோய் வாய் பிளப்பர். அதைக் கண்டு கைப்பிள்ளை வடிவேலுவுக்கே ஆச்சரியமாய் இருக்கும். ''இன்னுமா உலகம் எங்களை நம்புகின்றது?'' - என்று தன்னை மறந்து தோழர்களிடம் அக்காட்சியில் கேட்பார் வடிவேலு.

அதுபோலத்தான் இருக்கின்றது ஈழத் தமிழர் பிரச்சினையை ஒட்டி இப்போதும் கயிறுவிட்டுக் கொண்டிருக்கும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் போக்கும்.

வாழ்வா, சாவா என்ற இறுதிக் கட்டத்தில் அல்லாடிக் கொண்டிருக்கும் ஈழத் தமிழர் விடயத்தை ஒட்டி - இலங்கைத் தமிழர் பிரச்சினையில் - (இந்திய) மத்திய அரசு என்ன முடிவு எடுக்கப் போகின்றது என்பதை அறிய இன்னும் சில நாள்கள் பொறுத்திருப்போம் என்று தமிழக முதல்வர் கருணாநிதி தமது 'உடன்பிறப்புகளுக்கு' கடந்த வெள்ளியன்று எழுதிய தமது வழமையான கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் கடிதத்தைப் பார்க்கும் போது -

ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்திய மத்திய அரசு ஆக்கபூர்வமாக ஏதும் செய்யும் என்று கலைஞர் கருணாநிதி இன்னுமா நம்புகின்றார் என்றே கேட்கத் தோன்றுகின்றது.

அதேசமயம், இவ்விடயத்தில், தமது பதவிக் கதிரையைப் பற்றிக் கவலைப்படாமல் ஈழத் தமிழர்களுக்காகத் தமிழக முதல்வர் ஏதேனும் ஆக்கபூர்வமாகச் செய்வார் என்று நீங்களும் இன்னுமா நம்புகின்றீர்கள் என அப்பாவித் தமிழ்ப் பொதுமக்களும் ஈழ ஆர்வலர்களும் நம்மைப் பார்த்துக் கேள்வி எழுப்புவதையும் கூட நம்மால் உணரவே முடிகின்றது.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை முழு அளவில் பூர்த்தியடைந்த பின்னரே, அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கை அரசு உறுதி பூண்டுள்ளது.'' - என்ற செய்தி கடந்த வார இறுதியில் கொழும்புக்கு வந்திருந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனனிடம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெளிவுபட எடுத்துக் கூறிவிட்டார் எனப் புதுடில்லித் தகவல்கள் அறுதியிட்டுத் தெரிவிக்கின்றன.

எனவே, வன்னியில் குறுகிய சிறிய பரப்புக்குள் சுமார் நான்கு லட்சம் அப்பாவித் தமிழ்ப் பொதுமக்கள் சிக்குப்பட்டுள்ள நிலையில் 'புலிகள் அழிப்பு யுத்தம்' என்ற பெயரில் அந்தப் பிரதேசம் மீதான இலங்கைப் படைகளின் இராணுவ முற்றுகைத் தாக்குதல் மேலும் முழு அளவில் தீவிரப்படுத்தப்படப் போகின்றது என்பதை புதுடில்லிக்குக் கொழும்பு இவ்வளவு தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உணர்த்திவிட்டது.

அதற்கு இந்திய வெளிவிவகாரச் செயலாளரும் தலையசைத்து விட்டு புதுடில்லி திரும்பிவிட்டார். எனவே இனி, இராணுவ நடவடிக்கை வன்னியில் தீவிரமாகும் - அங்கு மனிதப் பேரழிவும் அவலமும் மோசமாகும் - என்பது திட்டவட்டமாக உறுதியாகிவிட்டது.

வன்னியில் ஈழத் தமிழர்கள் எதிர்கொள்ளப் போகும் மிக மோசமான மனிதப் பேரவலமும் கொடூரமும் இனி உறுதி என்றாகிவிட்ட நிலையில் -

இவ்விடயத்தைத் தடுத்து நிறுத்த இந்திய மத்திய அரசு ஆக்கபூர்வமான செயற்பாடு எதையும் முன்னெடுக்காது என்பது தெளிவான நிலையில் -

'மத்திய அரசின் முடிவை அறிய இன்னும் சில நாள்கள் பொறுத்திருப்போம்' - என்று தமது பதவியைத் தொடர்வதற்காகத் தமிழர்கள் காதில் பூச்சுற்ற முனைகின்றார் தமிழக முதல்வர் கருணாநிதி.

இப்போதுதான் திருமங்கலம் சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் தமது அரசியல் செல்வாக்குப் பலத்தை நிரூபித்துத் திருப்திப்படுகின்றார் கலைஞர் கருணாநிதி. அவரது தமிழக அரசுக்கான அமோக ஆதரவு சரியாமல் அப்படியே நீடிக்கின்றது என்பதைத் திருமங்கலம் தொகுதி இடைத்தேர்தல் முடிவு உணர்த்தி நிற்கின்றது.

இன்றைய நிலையில் ஈழத் தமிழர் பிரச்சினையில் நீதி செய்ய மறுக்கும் இந்திய மத்திய அரசுக்கு சூடு வைக்கும் வகையில், அந்த அரசிலிருந்து வெளியேறி, தமிழக மாநில சட்டசபைக்கான தேர்தல் ஒன்றை முற்கூட்டியே நடத்த கலைஞரின் அரசு தீர்மானிக்குமானால், அவரின் தலைமையிலான தி.மு.க. கூட்டமைப்பு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு யாரும் அசைக்க முடியாத வலுவான வெற்றியை அத்தகைய உத்தேச தேர்தலில் பெறும் என்பது நிச்சயம்.

ஆனால் அதை எல்லாம் பொருட்படுத்தாமல இன்னும் மத்திய அரசை நம்பிக்கொண்டு காலத்தை இழுத்தடிக்கின்றார் தமிழக முதல்வர்.

பதவிச் சுகத்தையும் அதிகாரத்தையும் நீண்ட பல வருடங்களாக உருசித்து சுவைத்திட்ட கலைஞர் போன்ற மூத்த அரசியல்வாதிக்கு இத்தகைய அதிகாரம் மீதான அதீத ஆசை பெரும் அபத்தமாகும்.

கலைஞரே! இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசை இன்னுமா நம்புகின்றீர்கள் என்று உங்களைப் பார்த்து சர்வதேசத் தமிழர்கள் எழுப்பும் கேள்விக்கு உங்களின் பதில் என்னவோ....?

# ஊடகத்துறை சுதந்திரம் குறித்த ஜனாதிபதி ராஜபக்ஷவின் அக்கறை

**'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் அதன் அரசியல் விமர்சகர் நேற்று 18.01.2009 அன்று எழுதியிருந்த கட்டுரையின் ஒரு பகுதி இங்கு தரப்படுகின்றது.**

இலங்கையில் ஊடகத்துறை சுதந்திரத்தை நசுக்குகிறார் என்று குற்றஞ்சாட்டி ஜனாதிபதியின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டமையானது மிக துரதிஷ்டமான ஒரு நிகழ்வுதான்.

அவர் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் சரி, அரசாங்கத்தில் இருக்கும்போதும் சரி ஊடகத்துறையில் பெரும் நண்பராகவே இருந்து வந்துள்ளார். பிரேமதாச ஆட்சியின்போது அவர் ஊடகத்துறையினரின் உரிமைகளுக்காகப் போராடினார். மனித உரிமைப் போராட்டத்தில் முன்நின்று வழிநடத்தினார். சந்திரிகா குமாரதுங்க, மங்கள சமரவீர ஆகிய இருவரும் இணைந்து ஊடகத்துறைமீது நடத்திய வேட்டைகளின் போதும் அவர் முன்னின்று எதிர்த்தார். அரசுக்கு எதிராக அவர் குரல் எழுப் பாமல் இருந்திருக்கலாம். ஆனால் ஒன்றிலும் பட்டுக்கொள்ளாமல் இருந்து வந்துள்ளார் - ஊடகங்களுக்கு எதிரான எந்த நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை.

ராஜபக்ஷ தனது அரசியலை நன்கு அறிந்தவராக இருந்தார். அரசியலில் உயர் பதவியை எட்டும் நிலையில் இருந்த அவர் ஊடகவியலாளருடன் மோதிக்கொள்ளாமல் இருப்பதில் கவனமாக இருந்துவந்தார். பிரேமதாசவும் குமாரதுங்கவும் பதவிக்கு வரு முன் ஊடகங்களோடு நெருங்கி உறவாடினார்கள் - பதவிக்கு வந்ததன் பின் மாறாக நடந்துகொண்டார்கள். ராஜ பக்ஷவும் அவ்வாறுதான் நடந்து கொள்கின்றாரோ என்ற வகையில் சிந்திக்கவைக்கும் சம்பவங்கள் கடந்த வாரம் இடம்பெற்றன. எம்.ரி.வி மற்றும் எம்.பி.சி தொலைக்காட்சி நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க சுட்டுக் கொல்லப்பட்டமை போன்ற சம்பவங்கள் ராஜபக்ஷ நிர்வாகம் மீது குற்றச்சாட்டுக்கள் எழுவதற்குக் காரணமா கின. விக்கிரமதுங்கவின் படுகொலை உண்மையில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் பெரும் அதிர்ச்சியாகவே இருந்திருக்கும்.

அச்சம்பவத்துக்கு சற்றுமுன்புதான் சுவர்ணவாஹினி தொலைக்காட்சித் தலைவர் ஜீவக்க எதிரிசிங்க மற்றும் அந்த நிறுவனத்தைச் சேர்ந்த பந்துல பத்மகுமார முதலியவர்களுடன் ஜனா திபதி ஊடகங்கள் மற்றும் ஊடக பிர முகர்கள் தொடர்பாக உரையாடிக்கொண் டிருந்துள்ளார். விக்கிரமதுங்கவைப் பற்றியும் அந்த உரையாடலின்போது ராஜபக்ஷ குறிப்பிட்டிருக்கிறார். தாங்கள் இருவரும் இப்போது மீண்டும் நண்பர்களாகியுள்ளதாக அவர் தெரிவித் துள்ளார். அவரது பத்திரிகை தமது அரசு குறித்துத் தெரிவிக்கும் விமர்சனங்கள் பற்றித் தாம் கவலைப்படவில்லை யென்றும் அப்பத்திரிகை கிராமிய மட்டத்தில் அதிக செல்வாக்கு பெற் றிருக்கவில்லை யென்றும் ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

மேலும் சில வாரங்களுக்கு முன்பு இடம்பெற்ற விக்கிரமதுங்கவின் திருமணத்துக்குத் தாம் அழைக்கப்பட்டிருந்தது பற்றியும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

கல்கிசை ஹோட்டலில் நடைபெறவிருந்த அத்திருமணத்திற்குத் தாம் போகவில்லையென்றும் அங்கு பாதுகாப்பு நிலைமையே இதற்குக் காரணம் என்றும் ஏற்கனவே பல திருமணங்களுக்கு அந்த ஹோட்டலுக்குத் தாம் சென்றிருக்கவில்லை யென்றும் ராஜபக்ஷ தெரிவித்திருந் துள்ளார்.

விக்கிரமதுங்கவுடன் முரண்பாடுகளைத் தீர்த்துக்கொண்டுவிட்ட பிறகும் அலரிமாளிகையில் இடம் பெறும் பத்திரிகையாளர் மாநாடுகளுக்கு அவர் அழைக்கப்பட்டபோதும் வராமலிருக்கிறார் என்றும் ஜனாதிபதி கவலை தெரிவித்துள்ளார்.

அவ்விரு ஊடகப் பிரமுகர்களும் விடைபெற்றுச் சென்றுவிட்டதன் பின் சற்றுநேரத்தில்தான் விக்கிரமதுங்க சுடப்பட்டுவிட்டார் என்ற தகவல் ராஜபக்ஷவுக்குக் கிடைத்தி ருந்தது. உடனடியாகவே செயல் பட்டு ஜனாதிபதி, காயமடைந்த பத்திரிகையாளருக்குத் தேவையான வைத்திய சேவைகள் அனைத்தையும் வழங்கும்படி உத்தரவுகள் பிறப்பித்தார்.

நிலைமைகள் திடீர் திருப்பங்கள் எடுக்கத் தொடங்கியதையடுத்து அன்று மாலையில் ஊடக நண்பர்களுடன் தொலைபேசித் தொடர்புகளில் உரையாடிய ஜனாதிபதி ''பாருங்களேன் நடந்திருப்பதை'' என்றவாறு சிலரிடம் கூறியிருக்கிறார். பின்னர் விக்கிரமதுங்க தமது திருமணத்தையொட்டித் தம்மைப் பார்க்கவரும் போது அவருக்குக் கொடுப்பதற்காக வைத்திருக்கும் பரிசுப்பொருள் பற்றியும் தெரிவித்துள்ளார். இந்தக் கால கட்டத்தில் அவரது சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ அரச பணியொன்றின் நிமித்தம் ஜகார்த்தாவுக்குப் போயிருந்துள்ளார். இக்கொலை பற்றிய செய்தி அன்றைய தினம் மாலையில் அவருக்கு அறிவிக்கப்பட்ட போது, ''இனி அவர்கள் என்மீதுதான் பழியைப் போடுவார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐ.தே.கட்சி காலம் தாழ்த்தாமல் உடனடியாகவே இக்கொலைச் சம்பவத்தை அரசியலாக்குவதில் ஈடுபட்டது. லஸந்த அக்கட்சியுடன் நெருக்கமான உறவுகொண்டிருந்தார் என்பது தெரிந்த விடயமே.

இம்மாதிரி மக்கள் ஆதரவுபெற்ற பிரமுகர்கள் மரணமாகும்போது சதித்திட்டங்கள் பற்றிப் பேசப்படுவது வழக்கம்தான். சதித்திட்டங்கள் ஒருபுறமிருக்கக் குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தை நோக்கியே முன்வைக்கப்பட்டன. இதற்குக் காரணம் இவ்வாறு ஊடகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான பல சம்பவங்கள் பற்றி ஜனாதிபதி முன்பு அறிந்திருந்துள்ளார். ஆனால் தடுக்கவில்லை - அல்லது தடுக்கமுடியவில்லை.

தடுக்கவில்லையென்பது சரியான காரியமன்று, தடுக்கமுடியவில்லையென்றால் ஜனாதிபதிக்கே இது கவலையளிக்கும் விடயமாகும். அதனால்தான் ஆனையிறவைப் படையினர் மீளவும் கைப்பற்றியது தொடர்பாக நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தியபோது ஜனாதிபதி கலக்கமடைந்தவராகக் காணப்பட்டார்.

படையினரின் வீரமிக்க செயல்களினால் அரசுக்கு வரும் பெருமையை சீர்குலைப்பதில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சில சக்திகள் ஈடுபட்டு வருகிறார்கள் என்று ஜனாதிபதி அப்போது கூறினார்.

## யாழ்.கொடிகாமம் பஸ் சேவையில் நேரமாற்றம் கோருகின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜன.19

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு காலையில் புறப்படும் 769 இலக்க பஸ்சேவையினை அரைமணித்தியாலம் முன்பாக புறப்பட உரிய நடவடிக்கை எடுக்குமாறு தென்மராட்சி பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

தற்போது கொடிகாமத்தில் இருந்து காலை6 மணிக்குப் புறப்படும் பஸ்ஸிலேயே யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு நோயாளர்களும், பார்வையாளர்களும் செல்கின்றனர். இந்த பஸ் யாழ்ப்பாணத்திற்கு காலை 7.15ற்குப் பின்னரே சென்றடைவதால் கிளினிக் செல்வோருக்கு இலக்கத் துண்டு கிடைக்காத நிலை ஏற்படுகின்றது. நோயாளர்களைப் பார்வையிடச் செல்வோர் காலை 7 மணியுடன் வார்ட்டினுள் செல்வது நிறுத்தப்படுவதால் நண்பகல் வரை அங்கு காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கொடிகாமத்தில் இருந்து காலை 5.30 மணிக்கு முதல் பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்.டிப்போவையும், தென்மராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கத்தினையும் கேட்டுள்ளனர்.

(202-ரி)

## நலன்புரி நிலையத்தில் உள்ளவர்களுக்கு சங்கத்தானை மக்கள் மதிய உணவு

கொடிகாமம், ஜன.19

மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு சங்கத்தானைப் பிரிவு மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதிய உணவை வழங்கியுள்ளனர்.

சங்கத்தானைப் பிரிவு கிராம அலுவலர் க.வேலாயுதபிள்ளை தலைமையில் நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களுக்கு 2,000 உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இதேவேளை கொடிகாமம் திருநாவுக்கரசு மடாலயத் தர்மகர்த்தா சபையினர் நலன்புரி நிலையத்திலுள்ள சிறார்களுக்கு 10 பிஸ்கட் பெட்டிகளை வழங்கியுள்ளனர். அத்துடன் சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியினரால் படுக்கை விரிப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை நலன்புரி நிலையத்திலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

(207)

### நாளை

| | |
|---|---|
| தை 07 | 20.01.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | தசமி |
| | பி.இ.04.12வரை |
| நட்சத்திரம்: | விசாகம் |
| | மு.இ.09.07வரை |
| சுபநேரம்: | 11.05 - 12.35 |
| ராகுகாலம்: | 03.35 - 05.05 |

## இடம்பெயர்ந்த மக்களுக்கு யாழ். ஆயர் உதவி

யாழ்ப்பாணம், ஜன.19

வன்னிப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மிருசுவில், கத்தோலிக்க கன்னியர் மடம், றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றில் தங்கியுள்ள 650 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு யாழ். ஆயர் வண. தோமஸ்சவுந்தரநாயகம நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளார்.

இம் மக்களுக்கு அத்தியாவசிய தேவையான உணவப்பொருள்கள், ஆடைகள், பாத்திரங்கள் என்பன ஆயரின் நிதியிலிருந்து கடந்த 16 ஆம் திகதி அருட்தந்தையர்களாலும், திருச்சிலுவை கன்னியர்களாலும் வழங்கப்பட்டன என ஆயரின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அறவழிப் போராட்டக் குழுவின் சேவைநிலையங்களின் திறப்புவிழா

கைதடி, ஜன.19

கைதடி நுணாவில் அறவழிப் போராட்டக் குழுவினரின் தொழிற் பயிற்சித்திறன் விற்பனையகம், காட்சியகம், சேவையகம் என்பன நாளை செவ்வாய்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.

உலகக் கனேடியப் பல்கலைக்கழக சேவைகள் அனுசரணையுடன் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தின் திறப்புவிழாவில் உலகக் கனேடியபப் பல்கலைக் கழக சேவைகள் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் திருமதி சீலா புதிய பணிப்பாளர்கள் ரீட்டர், றிச்டர் ஆகியோர் முதன்மைவிருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

அறவழி நிலையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வூல் (Wull) நிறுவன வடபிராந்திய பிரதிப் பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கம் முதலாவது விற்பனையை ஆரம்பித்து வைக்கவுள்ளார். (207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய அறிவித்தல்




### கிருஷ்ணா அடகு கடை


*370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*
பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு (2007.12.31) முன்னர் அடகுவைத்து மீட்கப்படாத அடகு நகைகள் யாவற்றையும் 2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு (2009.02.28) முன்பு மீட்டுக்கொள்ளவும்.

தவறின் 28 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2009 ஆம் ஆண்டு (28.02.2009) அன்று விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

370, K.K.S. Road,
Jaffna. உரிமையாளர்.


## நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டு ஒன்று

| மண் மகிழ | | கண் நெகிழ |
|---|---|---|
| 27 ◊ 09 ◊ 1957 |  | 01 ◊ 02 ◊ 2008 |

அமரர்

### திரு. மார்க்கண்டன் சிறீதரன்

(ஆசிரியர், யா/சித்தன்கேணி ஸ்ரீகணேச வித்தியாலயம்)

திதி – 19.01.2009

பார்ப்பதற்குச் சிறந்தவராய் நேர்மையின் சிகரமாய்ச் சிறந்த
வழிகாட்டியாய் நல்ல கணவனாய் பாசமிகு தந்தையாய்
அனைவர் மனதிலும் இடம்பிடித்து எம்வாழ்க்கை
இனிமையாய் ஆரம்பிக்கும்போது உங்கள்
உயிரைக்கொடிய நோய்க்குக் காவு கொடுத்தவரே!
திடீரென மறைந்ததால் திணறிப்போயுள்ளோம்
வருடங்கள் யுகங்கள் ஆனாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மனதில் பசுமையாய்ப் பாய்ந்தோடும்
அப்பா நீங்கள் எங்களைச் சுமந்த நினைவுகளோடு
வாழ்கின்றோம் இனிவரும் காலமும் நீங்கள்
எங்களுடன் வாழ்வீர்கள் என்ற நம்பிக்கையோடு
நினைவுகளைச் சுமந்து வாழும்

முருகமூர்த்தி கோயில் வீதி,
சாங்கானை கிழக்கு,
சாங்கானை.

மனைவி
மகன், மகள்
மற்றும் குடும்பத்தினர்.


## ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 17.02.1927 ஆண்டவன் அடியில் 31.01.2008

அமரர்

### கந்தையா விநாசித்தம்பி



அன்னையின் மடியில் தொடங்கிய வாழ்வு
ஆண்டவன் அடியில் இணையும் வரைக்கும்
குடும்பத்தினை சிரத்தில் கொண்டு சிந்தையிலிருத்தி வாழ்ந்தீர்கள்
மண்ணிற்கு மகிமையன்றோ நீங்கள் வாழ்ந்திட்ட காலம்
விண்ணிற்கு பெருமையன்றோ நீங்கள் கலந்திட்டஜோதி
உன்னத வாழ்வுடன் உத்தம குணங்கள் கொண்டு
அன்புள்ள கணவனாகவும் பாசமுள்ள தந்தையாகவும்
பண்பான மாமனாகவும் நேசமுள்ள பேரனாகவும் பந்தமுள்ள
பூட்டனாகவும் வாழ்ந்தீர்கள்
[illegible]ங்கள் வாழ்ந்த வாழ்வு ஓராண்டு கடந்தாலும் நெஞ்சைவிட்டு
ஆறாது
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

புங்குடுதீவு,
12 ஆம் வட்டாரம்.

## கோப்பாய் பிரதேசத்தில் விளையாட்டுக் கழகங்களுக்கான கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், ஜன.19

கோப்பாய் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுகள் செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே குழு விளையாட்டு நிகழ்வை நடத்துவற்கான போட்டி நிரல் தயாரிப்பதற்கான கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

பதிவு செய்த அனைத்து விளையாட்டுக் கழக பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1-72)

## பால்மா வகைகள் சங்கம்மூலம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன.19

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள அங்கர், லக்ஸ்பிறே முழு ஆடைப் பால்மா வகைகள் ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்படவிருப்பதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

அங்கர் (400 கிராம்)•பைக்கட் 280 ரூபாய் படியும் லக்ஸ்பிறே (400 கிராம்) பைக்கட் 252 ரூபாய்படியும் விற்பனை செய்யுமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தப் பால்மா வகைகளை பெற விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் செயலகத்தில் வழங்கல் கட்டளைகளைப் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1)

## பாடத்தெரிவு குறித்து நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.19

ஜி.சீ.ஈ. (உயர்தர) வகுப்புக்களின் பாடத் தெரிவு சம்பந்தமான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

சகல IAB, IC பாடசாலை அதிபர்களையும் க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணம் கேட்டுள்ளார்.


க.பொ.த. (உயர் தர) வகுப்புகள் நடத்தும் தனியார் கல்வி நிலைய நிர்வாகிகளையும்கலந்து கொண்டு உதவு மாறும்- வலயக் கல்விப் பணிப்பாளர் விஞ்ஞான, கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்களும் கல்வி அபிவிருத்தி, கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறும்- அவர் கேட்டுள்ளார். (1)


**LOGIC**
A/L
DAY CLASS
R.S. சந்திரன் B.Com
திங்கள் முதல்
வெள்ளி வரை
சங்கானை - 9 am
(A.G.A. Office அருகில்)
பொருளியற் கல்லூரி
(யாழ். நகர்) - 10 am


## தவறிவிட்டது

2009.01.12 ஆம் திகதி அன்று மதிய நேரம் வழி இல.788, இளவாலை, பண்டத்தரிப்பு ஊடாக யாழ்ப்பாணம் வரும் மினி பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது பண்டத்தரிப்பிற்கும், கன்னாதிட்டி வங்கிக்குமிடையில் தங்கப்பவுண் வார்ப்புக்கட்டி ஒன்று தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் கருணை உள்ளம்கொண்டு ''கார்த்திகா நகைப்பூங்கா'' கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு உரிமையாளர் க.செல்வரட்ணம் அவரிடம் ஒப்படைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### சபாபதிப்பிள்ளை கனகரட்ணம்

அன்போடும் பண்போடும் அகமதைச் சிறப்பித்தீர்
கண்போல் எமைக் காலமெலாம் காத்திருந்தீர்
இன்று விண்ணகத்தை உன்னகமாய் ஆக்கிவிட்டீர்
இனி கண்ணனவன் துணைதானே அவன் காத்திடுவான்.

(உள்ளே 10 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள மேற்படி விளம்பரத்தின் கவிதையின் [illegible])

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 15.07.1976 ஆண்டவன் அடியில் 31.01.2008

அமரர்

### பொன்னுத்துரை கிருஸ்ணகுமார்

(வருமான வரிப்பரிசோதகர் – நல்லூர் பிரதேச சபை)

திதி: நவமி 19.01.2009

பண்பாக பேசி பாசமுடன் பழகி பார் போற்ற வாழ்ந்த உத்தமரே
கண்ணா கிருஸ்ணா என செல்லமாக அழைத்தோமே
கடமை கண்ணியம் கட்டுப்பாடு என வாழ்ந்து இனிய
இல்லற வாழ்வில் மழலையுடன் இன்புற்றிருந்தவேளை
பதவி உயர்வுபெற்று நல்லூர் பிரதேச சபை சென்று
இளமைத் துடிப்போடு சுறுசுறுப்புடன் பணியாற்றிய வேளையில்
திருநெல்வேலியிலே காலனவன் குண்டு வடிவில் வந்து
உந்தன் உயிரைக் கவர்ந்து சென்று
பன்னிரண்டு திங்களானாலும் என்றும் எம்மூச்சு
உள்ளவரை உம் நினைவிருக்கும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் சிவக்கொழுந்து (நாகம்மா)



பெரிய அரசடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவக்கொழுந்து (நாகம்மா) நேற்று (18.01.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் சிவராஜா, சுந்தரராஜா (லண்டன்), காலஞ்சென்ற செல்வராஜா ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் அன்புச் சகோதரியும் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த சரஸ்வதி, கமலேஸ் (மணி) ஆகியோரின் சிறியதாயும் பரமேஸ்வரி (கொழும்பு), விஜயலட்சுமி (கனடா), வினோதினி ஆகியோரின் மாமியாரும் உஷாநந்தினி (கனடா), கவிதாநந்தினி (கனடா), கிருபாநந்தினி (கொழும்பு), ஜெயபிரதாப் (கனடா), அனுசியா ஆகியோரின் பேர்த்தியும் ஆதிரையின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அல்லாரை கொற்புலவு பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரிய அரசடி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.*

தகவல்:
சிவராஜா (மகன்).

### முருகர் சின்னத்துரை



வண்.வட.கிழக்கு, கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் சின்னத்துரை நேற்று (18.01.2009) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் சிவபதப் பேறு அடைந்தார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற முருகர் - சின்னக்குட்டி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னப்பொடி - நாகம்மா தம்பதியினரின் மருமகனும் கந்தசாமி (Colombo), பாக்கியம், காலஞ்சென்றவர்களான இரத்தினம், செல்லையா, அப்புத்துரை பொன்னரியம், கண்மணி, இராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கந்தையா, சின்னம்மா, இராசம்மா, செல்லையா, சரஸ்வதி, பாலசிங்கம் (Switzerland), காலஞ்சென்ற முத்தர், கணபதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஞானேஸ்வரி (Germany), ஜெயமலர் (India), தவமலர் (France), நேசமலர் (Canada), றோஸ்மலர் (France), யோகசீலன் (Jaffna), யோகேஸ்வரி (Canada), கருணாதேவி (India) ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி (Germany), வரதராசா (Canada), பற்பநாதன் (France), செந்தில்நாதன் (France), நகுலராஜா (Canada), உதயகுமார் (Canada), குமாரகுலசிங்கம் (India) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுதர்சன் (London), நிருஷா (Germany), கௌரி (Canada), தேவகி (Canada), வதனி (Holand), பவானி (Colombo), தாரணியன் (Canada), ஸ்திவாணியா (France), கலியுகன் (France), துர்க்கா (France), ஜனனி (France), திவ்யா (Canada), ஆகாஷ் (Canada), அபிலாஸ் (Canada), கோகிலேஸ் (India) ஆகியோரின் அன்புப் பேரனும் சாய்ராம், சாகித்யா, காவியன், ஆத்தியா (Canada), விதுசாயி, சானுகா (Holand) ஆகியோரின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*43/10, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
யோகசீலன் (மகன்), ஜெயமலர் (மகள்),
V.K.தனபால (பேரமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2008- 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில்

# அதிக புள்ளிகள் பெற்றோருக்கு இலங்கைவங்கியும் பரிசில் வழங்கும்

யாழ்ப்பாணம், ஜன.19

2008 ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுச் சித்திய டைந்த 1250 சிறுவர்களிற்கு இலங்கை வங்கி புலமைப்பரிசில்களை வழங்கவுள் ளது.

பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் 1000 சிறுவர்களிற்கும், ஒவ் வொரு மாவட்டத்திலும் அதிகூடிய புள்ளி கள் பெற்ற முதல் 10 சிறுவர்களிற்குமென 25 மாவட்டங்களிலும் 250 சிறுவர்களிற் கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள் ளன.

இதற்கு 2008 ஆகஸ்ட் 17 ஆம் திகதி 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை யில் பரீட்சைக்குத் தோற்றிய சிறுவர்க ளின் ''ரண்கெகுளு'' கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா 2,500 பேணப்பட்டி ருக்க வேண்டும்.

இதற்குப் பிள்ளையின் பெயர், மாவட் டம், பாடசாலை, பரீட்சை இலக்கம், பரீட் சையில் பெற்ற புள்ளிகள், மாவட்டத்தின் முன்னுரிமை, ''ரண்கெகுளு'' கணக்கிலக் கம், கணக்கைப்பேணும் கிளை, தாய் அல் லது தந்தை அல்லது பாதுகாவலரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை எழுதிப் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் உறுதிப்படுத்தலுடன் கணக்கைப்பேணும் கிளையில் 31.01.2009 இற்குமுன் ஒப்படைக்குமாறு கேட்கப்பட் டுள்ளது. (ப-ரி)



வதிரி திரு இருதயக்கல்லூரியின் கால்கோள் விழாவில் ஆரம்பப்பிரிவு பொறுப் பாசிரியை அருட்சகோதரி சிறியபுஸ்பமும் மற்றும் ஏனைய மாணவர்களும் விழா நாயகர்களை வரவேற்கின்றனர்.



மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் தரம் ஒன்று மாணவர்களுக்கான கால்கோள் விழாவில் எடுக்கப்பட்ட படம்.

விருந்தினர்களான சேது.விபுலானந்தா, ந.துரைராஜசிங்கம், அ.செல்வராஜா மற்றும் அதிபர் நா. சிவனேசன் ஆகியோரும், விழா நாயகர்களும் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் விழா மேடைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் கால்கோள் விழாவில் எடுக்கப் பட்ட படம்.

மாணவர்கள் சுன்னாகம் பழனி கோவிலிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். அதிபர் க.ரவீந்திரன் மற்றும் ஆசிரியர்களும் படத்தில் உள்ள னர். (88)

## ....செய்திச் சரம்.... செய்திச் சரம்...

### கிணறுகள் சுத்திகரிப்பு

வண்ணை, ஜன.19

நிஷா புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட யாழ்.வலயக்கல்வி வலயத் திற்குட்பட்ட 45 கிணறுகளை கியூ டெக்-கரித்தாஸ் நிறுவனம் சுத்திகரித்து குளோரின் இடும் பணியினை ஆரம்பித் துள்ளது.

இதுவரை 12 கிணறுகள் சுத்திகரிப்புப் பணிகள் முடிவடைந்து ஒப்படைக்கப் பட்டுள்ளதாகவும் ஏனைய கிணறுகளை யும் இறைத்து குளோரின் இடும்பணிகள் தொடர்ந்து இடம்பெறுவதாகவும் தெரி விக்கப்படுகிறது. (160)

### வைத்தியசாலையில் விடுதிகளுக்கு வர்ணப்பூச்சு

யாழ்ப்பாணம், ஜன.19

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை யில் உள்ள இரு விடுதிகளிற்கு வர்ணம் பூசப்பட்டுள்ளது. சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினால் வர்ணம் பூசப்படு வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)

### சுற்றுமதில் இன்மையால் கால்நடைத் தொல்லை

யாழ்ப்பாணம், ஜன.19

கைதடி அரச முதியோர் இல்லத்தின் பின்புறத்திற்குச் சுற்றுமதில் அமைக்கப்பட வில்லை. இதனால் அச்சூழலில் உள்ளவர் களின் கால்நடைகள் உட்செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. மதிலின்மையால் மரவேலியே அமைக்கப்பட்டுள்ளது. (224)

### கொப்பிகள் அன்பளிப்பு

வண்ணை, ஜன.19

வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட பாட சாலை மாணவர்களுக்கு கியூடெக்- கரித் தாஸ் நிறுவனம் அப்பியாசப் புத்தகங் களை வழங்கி வருகின்றது.

இதுவரை 18 பாடசாலைகளுக்கு இவற்றை வழங்கியுள்ளதாகவும், மேலும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு வரிசைக்கிரமத்தின்படி வழங்கவுள்ளதா கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

### பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்தக் கோரிக்கை

சித்தங்கேணி, ஜன.19

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசா லைக்குச் செல்லும் நோயாளிகளின் வசதி கருதிப் போக்குவரத்து வசதிகளை ஏற் படுத்தித் தருமாறு அப்பகுதிச் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் பிரதான வீதியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை நடந்து செல்ல வேண்டிய நிலை ஏற்படு கின்றது.

இந்நிலையைக் கருத்தில் கொண்டு யாழ்ப்பாணம் -மாதகல் சேவையில் ஈடுபடும் 787 வழி பஸ்ஸை வைத்திய சாலைவரை சென்று திரும்பக் கூடியவாறு ஏற்பாடு செய்யுமாறு கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (202-112)

### திருமறைக்கலாமன்றத்தின் அழகியல் கற்கைகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.19

திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது அழகியல் கல்லூரியினால் நடத்தப் படும் பாடங்களின் 2009 ஆம் ஆண்டுக் கான புதிய வகுப்புகளுக்கான விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதான பாடங்களான வாய்ப்பாட்டு, நடனம் (பரதம்/கதகளி), வீணை, வய லின், புல்லாங்குழல், கிற்றார், ஓர்கன் (கீபோட்), சித்திரம், நாடகமும் அரங்கிய லும் (ஜீ.சீ.ஈ (உ/த) 2011, தரம் 10, 11) என்பனவற்றிற்கும் -

சிறப்புப் பாடங்களான யோகாசனம், அழகியல் கலை (தலை அலங்காரம், முக ஒப்பனை, கேக் ஐசிங், சாறி வேர்க்ஸ்), ஆங்கிலம், கண்டிய நடனம் என்பவற் றிற்கும் - விசேட விரிவுரைப் பாடங்க ளான தமிழர் பண்பாடு-அழகியலும், சமயங்களும், தமிழர் பண்பாடு- அழகி யலும், மெய்யியலும் என்பனவற்றிற்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (202)

### 50 வருடமாகத் திருத்தப்படாதுள்ள பாண்டுவெட்டை-கல்லவேம்படி வீதி

சங்கானை, ஜன.19

சங்கானையில் 50 வருடத்திற்கு மேலாக பாண்டுவெட்டை- கல்லவேம்படி பாதை திருத்தப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது. இதனால் பாவனையா ளர்கள் கடுஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என இக்கிராம சனசமூக நிலையத்தினர் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் பாடசாலை, முன்பள்ளி, கோயில்கள் இருப்பதாகவும் மாணவர்கள், கடற்றொழிலாளர்கள் என இக்கிராமத்தின் 270 குடும்பங்களும் இப்பாதையைப் பயன்படுத்துகின்றனர். மழைகாலங்களில் இப்பாதையால் போக்குவரத்துச் செய்ய முடியாதுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்ற னர்.

இது சம்பந்தமாக சமூக சேவைகள் அமைச் சர் முதல் உள்ளூராட்சி அதிகாரிகள், அரசசார் பற்ற நிறுவனங்களிற்கு பல முறை அறிவித் தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தெரிவிக்கின்றனர். (29)

### வடலியடைப்பில் இருவீதிகளைப் புனரமைக்கக் கோரிக்கை

சித்தங்கேணி, ஜன.19

வடலியடைப்பு காயாவீதி, கலட்டு வீதி ஆகியவற்றைப் புனரமைத்துத் தரு மாறு அரசடி சனசமூக நிலையம் மானிப்பாய் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த இரு வீதிகளும் கடந்த 35 வருடங் களாகப் புனரமைக்கப்படவில்லை. கலட்டு வீதியை 2007 ஆம் ஆண்டு சனசமூக நிலை யத்தினர் சிரமதானம் மூலம் புனர மைத் தனர். எனினும் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் அவ்வீதி மீண்டும் சேதமடைந்துவிட்டது. எனவே இரு வீதிக ளையும் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (202-112)

### மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

கடந்த ஜீ.சீ.ஈ. உயர்தர, சாதாரணதர, ஐந்தாம்தர புலமைப்பரிசில் ஆகிய பரீட் சைகளில் சித்திபெற்ற சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர் களின் பிள்ளைகள் சங்கப் பணியாளர்கள் சங்கத்தினால் அண்மையில் கௌரவிக்கப் பட்டனர்.

இந்த மாணவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டன.

பணியாளர் சங்கத்தலைவர் செ.சுப்பிர மணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் கொடிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் கதிரவேலு, கூட்டுறவு அபிவிருத்தி அலு வலர் ம.பிரபாகரன், கலால் திணைக்கள அலு வலர் வே.முருகதாஸ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (202-207)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜன.19

கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத் தின் பரிசளிப்பு விழா இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் திருமதி சாந்தினி வாகீசன் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் பிரதம விருந்தினராகவும், நிக்கொட்திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் என்.எல்.ஆர். சிவரூபன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

### இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய் பிரிவு நடத்தும் கணனிப்பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜன.19

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டி லிப்பாய் பிரிவினால் கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சிபெற விரும்புவோர் '3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை' என்னும் முகவ ரியிலுள்ள பிரிவு அலுவலகத்தில் எதிர் வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப் பப் படிவங்களைப் பெற்றுப் பூரணப் படுத்தி, அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலத்தில் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பயிற்சி தொடர்பான மேலதிக விவரங்களை பிரிவுக்காரியாலயத்துடன் அல்லது 021 222 2886 தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

லயன்
**பொன்னுத்துரை சற்குணநாதன்**
உப அதிபர், யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி
(B.Sc (Hons) Agri P.G.D.E,M.Ed.)
S.L.T.E.S-III

அவர்கள் மட்டக்களப்புக் கல்வியியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்று ச் சென்றதை ப் பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல பட்டங்களையும், பதவிகளையும் பெற எல்லாம் வல்ல நீர்வைக் கந்தனின் அருள் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.
**உறவினர்கள்.**

(81912)

## கலைமுகம் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜன.19

திருமறைக் கலாமன்றத்தினால் வெளியிடப்பட்டு வருகின்ற 'கலைமுகம்' கலை, இலக்கிய, சமூக இதழின் 50ஆவது சிறப்பிதழுக்கான தரமான ஆக்கங்கள் படைப்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைப்புக்களை அனுப்ப விரும்புபவர்கள் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் '50ஆவது பொன்மலர்' எனக் குறிப்பிட்டு, ஆசிரியர், 'கலைமுகம், திருமறைக்கலாமன்றம், 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அடுத்த மாதம் 28 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202)

## பயிர்கள் வாடுவதால் விவசாயிகள் சிரமம்

கெருடாவில், ஜன.19

வடமராட்சியில் நிஷா வெள்ளத்தி னால் அழிவடைந்து எஞ்சி நிற்கும் நெற் பயிர்கள் தற்போது கதிர்வரும் நிலையில் உள்ளன.

இந்நேரத்தில் வரட்சி நிலவுவதனால் பயிர்கள் யாவும் நீரின்றி வாடுகின்றது. இது விவசாயிகள் மத்தியில் பெருமங் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இப்பயிர்களுக்கு தேவையான நீரை நீண்டதூரத்திலிருந்து கொண்டுவர வேண்டியிருப்பதால் விவசாயிகள் பெரிதும் சிரமப்படுவதாகவும் வெள்ளம்வரும் முன்னரும் இப் பயிர்கள் நீர் இல்லாது வாடியதாகவும் கூறப்படுகின்றது.

(253)

## மனம் நிறைந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்



சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்
மேதகு திரு.
**டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்
பிரதேச அமைப்பாளர் **றீகன்**
அவர்களுக்கும் எமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறி நிற்கின்றோம்.
வீட்டுத்திட்ட நிதியுதவியாக எமக்கு தலா 50 ஆயிரம் ரூபா தந்துதவியமைக்கு எமது உளம் நிறைந்த நன்றிகள்.

நன்றிகளுடன்:
**வளன்புரம் மக்கள்.**
வளன்புரம் ,கொழும்புத்துறை.

## இல்லற வாழ்வின் அறுபது (௬௦) ஆண்டுகள் நிறைவு

**V. திருஞானசம்பந்தர் மீனாட்சிப்பிள்ளை தம்பதியினர்**



1977 ஆம் ஆண்டு அனுராதபுரம் புகையிரத நிலைய அதி பராகக் கடமையாற்றும் பொழுது, குண்டர்கள் தமிழரைத் தாக்க, நீங்கள் புகையிரத நிலைய மேல்மாடியில் ஒளித்திருக்க, பக்கத்து அறையிலிருதவர்களை அடித்துச் சாக்காட்டியும் துன்புறுத்தியும் முடிந்து, உங்கள் அறைக் கதவை அடிக்க, மேல் கண்ணாடி உடைந்து விழ, திறப்பு இறுக, கீழ்மாடியில் பொலிஸ் விசில் அடிக்க, குண்டர்கள் விட்டு விலகிச் சென்றனர். உயிர் தப்பிய மைத்துனர் அவர்களே!

நாற்பது ஆண்டுகள்(௪௦) சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆங்கிலம் போதித்துப் பலரை அறிவுக் கடலுக்குச் செல்ல வழி வகுத்த சகோதரி அவர்களே!

நீங்கள் மணமாகி அறுபது (௬௦) ஆண்டுகள் நிறைவடைவதையிட்டு அக மகிழ்கின்றோம். நீங்கள் பெற்றோரைப் பராமரித்தீர்கள். சகோதரர்கள் வாழ வழி அமைத்தீர்கள். பிள்ளைகளைக் கரை சேர்த்தீர்கள். சுற்றத்தாரை, அயலவர்களை அனுசரித்தீர்கள். சமூகத்தில் முன்னுதாரணமான குடும்பமாக மதிப்போடு வாழ்ந்தீர்கள். நாட்டுநிலைமை காரணமாக அவுஸ்ரேலியாவில் வாழ்ந்து தாய் நாடு வரத் துடிக்கும் நிறைவாழ்வு கண்ட உங்களை நீடு வாழப் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த**
**டாக்டர் அம்பிகைபாகனும்,**
**சகோதரி குடும்பமும்.**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னையின் மடியில்
16.02.1934

ஆண்டவர் அடியில்
19.01.2008

திருமதி
**வடிவேலு சரஸ்வதி**

அன்னையாய் அருளுருவாய் அன்பின் வடிவாகி
இன்முகம் காட்டி இரங்குகின்ற தாயாகி
மன்னும் புகழ்பெற்று மாசின்றி வாழ்ந்தவரே-உங்கள்
நன்னலம் நினைந்து நல்குகிறோம் அஞ்சலிகள்!

'தயா பவனம்'
வேம்பிராய் றோட்,
மீசாலை.

**கணவர், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05 ✱ 10 ✱ 1937

மறைவு
31 ✱ 01 ✱ 2008

**திருமதி பாலசிங்கம் பர்வதாதேவி**
திதி: நவமி (19.01.2009)

எம்மை எல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்டு ஓராண்டை
அடைந்து கடந்து விட்ட எங்கள் குடும்பத் தலைவியின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!!!

சிவசக்தி கோவிலடி,
அச்சுவேலி தெற்கு
அச்சுவேலி.

(81918)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கற்குளம் கொட்டடி பிரதேச இளைஞர், யுவதிகள் இணைந்து தைப்பொங்கல் தினத்தன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் செய்தனர். அதன்போது எடுக்கப்பட்ட படங்கள்.

# யாழ்.பல்கலையில் விழிப்புல வலுவிழந்தோருக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை

## துணைவேந்தர் சண்முகலிங்கன் தகவல்

சுன்னாகம், ஜன.19

யாழ்.பல்கலைக்கழகத்தில் விழிப்புல வலுவிழந்தவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும் விசேட வகுப்புகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. கலைப்பீடாதிபதியுடன் இணைந்து இதற்கான நடவடிக்கை களை நான் முன்னெடுக்கின்றேன்



எனப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்தார்.

வாழ்வகத்தின் நிறுவுநர் உதயநாள் மற்றும் பரிசளிப்பு விழா வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற போது பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் கையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தமதுரையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:

இன்று மனிதனுடைய அறிவு அனைத்தையும் வென்றுள்ளது. அந்த அறிவு மேம்பாட்டினால் விழிப்புல வலுவிழந்தவர்களும் சமூகத்தின் அனைத்துச் சவால்களையும் வெற்றிகொண்டு மேலெழுந்துள்ளனர். பல்கலைக்கழகக் கல்வியை முடித்து தொழிலுலகில் சிறப்பாகச் செயற்படுமளவுக்கு அவர்கள் வல்லமை பெற்றுள்ளனர்.

வலுவிழந்த விழிப்புல வாழ்வகம் பிள்ளைகளின் ஆற்றலை வளர்ப்பதற்கு மேலாக அவர்களிடத்தில் நம்பிக்கையை வளர்த்துள்ளது. வாழ்வகத்தை நிறுவிய அன்னை அன்னலட்சுமி சின்னத்தம்பியிடம் எதிர்காலம் பற்றிய தரிசனம் இருந்துள்ளது. அர்ப்பணிப்பும் இருந்துள்ளது. அதுதான் இந்நிறுவனத்துக்கு உயிர்ப்பைத் தந்து உலகளாவிய ரீதியில் பேசப்படும் நிலைக்கு உயர்த்தி யுள்ளது.

பல்கலைக்கழகத்தில் விழிப்புல வலுவிழந்தவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கும், விசேட வகுப்புக்களை நடத்துவதற்கும் கலைப்பீடாதிபதியுடன் இணைந்து நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். விழிப்புல வலுவிழந்தோரின் வல்லமைகள் பல துறைகளிலும் பல்கிப் பெருக வேண்டும்-என்றார்.

செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தனதுரையில் தெரிவித்தவை வருமாறு: எமது சிறுவர்களைச் சிறுவயதிலேயே தர்ம காரியங்களில் ஈடுபடுவதற்குப் பயிற்றுவிக்க வேண்டும். மேலைநாடுகளில் சிறுவர்கள் இதற்கெனப் பழக்கப்படுத்தப்பட்டுள்ளனர். மேலைநாடுகளில் தர்மச் செயல்களுக்காகப் பாடசாலைகளில் மாணவர்களால் வழங்கப்படும் பணமே செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு முதலான நிறுவனங்களால் எமது நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றன.

பிலிப்பைன்ஸ் நாட்டில் பாடசாலைகளில் மூன்று உண்டியல்கள் வைத்திருப்பார்கள். அவை ஒவ்வொன்றிலும் தமது பாடசாலைக்கானதும், தமது திருச்சபைக்கானதும், ஏனைய நாடுகளிலுள்ள ஏழை மக்களுக்கு உதவுவதற்காகவும் நிதி திரட்டப்படுகிறது. இத்தகைய முன்மாதிரிகளை நாமும் பின்பற்ற வேண்டும் - என்று குறிப்பிட்டார்.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் அங்கு உரையாற்றும்போது,

விசேட கல்வித்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. அத்துறை சார்ந்து பயிற்சிகளும் மேலதிகக் கல்வி வசதிகளும் அளிக்கப்படுவது அவசியமாகும். விசேட கல்வி என்பது தொடர்பில் பலரிடமும் விழிப்புணர்வு காணப்படவில்லை. அதனைப் போதிப்பது சுலபமெனப் பலரும் எண்ணுகின்றனர். உண்மையில் நன்கு விளங்கி, பிள்ளைகளுடன் ஊடாடி அதனைக் கற்பிக்க வேண்டியது இன்றியமையாததாகும். விசேட கல்வி பற்றிய கற்கைநெறியொன்று பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். டிப்ளோமாவாக ஆரம்பித்து பட்டநெறி கற்கையாக அது விரிவுபடுத்தப்படுவது அவசியமாகும் - என்று குறிப்பிட்டார்.

பரிசில்களை திருமதி கௌரி சண்முகலிங்கன் வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (202-38)

# உள்ளூராட்சி மறுசீரமைப்புச் செயற்பாடுகள் சிலவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.19

உள்ளூராட்சி சபைகளில் நடை முறைப்படுத்தப்பட்டுள்ள உள்ளூராட்சி மறுசீரமைப்பு செயற்பாடுகளில் இவ்வருட முதல் காலாண்டில் குறிப்பிட்ட சில செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்குமாறு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், சகல பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களையும் மாநகரசபை ஆணையாளர்களையும், கேட்டுள்ளார்.

சபைகளில் உள்ள குறிப்பிட்ட செயற்பாடுகளை நாளை செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் அறிக்கையிடுமாறும் கேட்டுள்ளார்.

ஓய்வுபெற்றும் அல்லது இறந்தும் இதுவரை ஓய்வூதியம், அல்லது விதவை அநாதை ஓய்வூதியம் பெறாதோர் விவரம், ஓய்வூதியக் கோவைகள் உரிய திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டும் இதுவரை ஓய்வூதியம் கிடைக்கப்பெறாதோர் விவரம், புதிய நியமனங்களில் இதுவரை அறிக்கையிடாதோர் விவரம், இதுவரை உள்ளீர்ப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாதோர் விவரம் ஆகியவற்றை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னரும்-

இதுவரை விதவை, அநாதை ஒய்வூதியத்திற்கு விண்ணப்பிக்காதோரின் விண்ணப்பங்களை அனுப்பி வைத்து அதுபற்றிய அறிக்கையையும், இவ்வருடம் ஓய்வூதியம் பெறுவோரின் விவரங்களையும் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னரும் -

அனுமதிக்கப்பட்ட விடுமுறையில் சென்று இதுவரை மீளக் கடமைக்கு சமூகமளிக்காதோர் விவரத்தினை பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னரும் -

அரச சேவையில் இதுவரை பதவியில் உறுதிப்படுத்தாதோர் விவரத்தினை பெப்ரவரி பத்தாம் திகதிக்கு முன்னரும், சுய விவரக் கோவைகள் மாகாணப் பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. என்.பி/02/2008(5)இன்படி முழுமையாக பூரணப்படுத்தப்பட்ட அறிக்கையினை பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னரும் அனுப்பி வைக்குமாறும் அறிவித்துள்ளார். (202)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜன.19

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி சங்கத்தின் ஆதரவுடன் நடத்திவரும் தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

ஐங்கரன் விளையாட்டுக் கழகம் எதிர் நியூகிற் விளையாட்டுக் கழகம். (202-86)

* * *

வலி.வடக்கு,ஜன.19

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவினால் யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையே மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

பெண்கள்

*யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணி எதிர் யாழ்ப்பாணம் குருநகர் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

ஆண்கள்

*வட்டுக்கோட்டை ஒல்ட் கோல்டன் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் குருத்துவக் கல்லூரி மாணவர்களின் டி மார்ஷல் விளையாட்டுக்கழகம்.

(202-86)


* * *

வலி.வடக்கு,ஜன.19

தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையேயான 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

*இளவாலை சென் லூட்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம்.

*காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் எதிர் அளவெட்டி டயானா விளையாட்டுக் கழகம். (202-86)




# பண்ணையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்

சுன்னாகம், ஜன.19

தெல்லிப்பழை கால்நடை வைத்திய பிரிவில் சென்ற ஆண்டுக்கான சிறந்த பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வகையில் மாடு வளர்ப்பில் சி.விஜயரத்தினம் (அளவெட்டி மேற்கு) முதலாமிடத்தையும், வை.கருணாகரன் (கோணாவளை, வசாவிளான்) இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர். ஆடு வளர்ப்பில் வ.சுதாகரன் (மல்லாகம்) முதலாமிடத்தையும், ப.தம்பிரத்தினம் (இளவாலை) இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர். கோழி வளர்ப்பில் என்.பாலகணேசன் (மல்லாகம்) முதலாமிடத்தையும், ஸ்ரீ.ஸ்ரீகாந்தன் (இளவாலை) இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர். (202-38)

# கிராமிய தொழிற்ப நிலையம் இடம்மாற்றம்

நவாலி, ஜன.19

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 2001ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிராமியத் தொழிற்பயிற்சி நிலையம் தற்போது இம்மாதம் 5ஆம் திகதி முதல் வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வட்டு கிழக்கு, சித்தங்கேணியில் உள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் தெரிவித்துள்ளார்.

(202-100)

# விழிப்புலனற்றோருக்கு கொழும்பில் ஆக்கத்திறன் போட்டிக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.19

கொழும்பிலுள்ள விழிப்புலன் அற்றவர்களுக்கான தேசிய செயலகம் கண்பார்வையற்றவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியை கவிதை, சிறுகதை, சஞ்சிகை ஆக்கம் ஆகிய விடயங்களில் நடத்தவுள்ளது.

இதற்குரிய ஆக்கங்களை 31.05.2009 ஆம் திகதிக்கு முன்னர் றெய்ல் எழுத்துக்கள் மூலமும், சாதாரண எழுத்துக்கள் மூலமும் அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விவரங்களை 'சமூகசேவை உத்தியோகத்தர், வலி. கிழக்கு, கோப்பாய்' அல்லது 'மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர், பிராந்திய அலுவலகம், காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளி' ஆகிய முகவரியிலோ அல்லது 060 221 1256 என்னும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(204)

# சண்டிலிப்பாயில் மீளாய்வு நடவடிக்கை

நவாலி, ஜன.19

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களின் பணம் பெறும் அட்டைகள் இன்று திங்கட்கிழமை முதல் அந்தந்தப் பிரிவு கிராம சேவையாளர் அலுவலகங்களில் வைத்து சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசாவினால் மீளாய்வு மேற்கொள்ளப் படவுள்ளது.

இதற்கமைய ஜே/135 நவாலி கிழக்குக்கு இன்றும், ஜே/136 நவாலி தெற்குக்கு நாளையும், ஜே/137 நவாலி வடக்குக்கு 22ஆம் திகதியும், ஜே/138 மானிப்பாய் கிழக்குக்கு 23ஆம் திகதியும், ஜே/139 மானிப்பாய் தெற்குக்கு 26ஆம் திகதியும், ஜே/143 மானிப்பாய் மேற்குக்கு 27ஆம் திகதியும் ஜே/141 மானிப்பாய் வடக்குக்கு 29ஆம் திகதியும், ஜே/142 மானிப்பாய் மத்திக்கு 30ஆம் திகதியும் மீளாய்வு செய்யப்படவுள்ளன.

உரியவர்கள் பணம் பெறும் அட்டையுடன் நேரடியாக காலை 9 மணிக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(202-100)

# இடம்பெயர்ந்த மக்களுக்கு தென்மராட்சிப் பிரதேச நிறுவனங்கள் உதவி

யாழ்ப்பாணம், ஜன.19

தென்மராட்சி பிரதேச அரச, கூட்டுறவு, வங்கி, வர்த்தக சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் மிருசுவிலில் தங்கியுள்ள மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்களை வழங்கி வருகின்றனர்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி கொமர்ஷல் வங்கி ஆகியவை மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை வழங்கியுள்ளன.

படுக்கை விரிப்பு, நுளம்புச் சுருள், பாய், பனடோல், தீப்பெட்டி, மெழுகுதிரி, சாப்பாட்டுத் தட்டு, குடிநீர்க்குவளை போன்ற அத்தியாவசியப் பொருள்களே வழங்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி வீடமைப்புத்

## கெருடாவில் கொலனி (48 வீடுகள்), கெருடாவில் மண்டபக்காடு (32 வீடு

## சர்வதேச லயன்ஸ் கழகத்தின் முன்னாள் சர்வ

# அவர்களால் 19.01.2009 ஆம் திகதி வை



## MESSAGE FROM

**Mahendra J C Amarasuriya Immediate Past International President - Lions Clubs International (LCI) and Chairperson - Lions Clubs International Foundation (LCIF)**


As we all are aware the Tsunami devastation caused unprecedented damage and destruction to property and loss of life in Sri Lanka in 2004.

The Lions were in the forefront of the NGOs providing immediate relief to the displaced persons and rendering yeoman service in the effort to assist those unfortunate people. They have been also in the forefront of the endeavors to built houses in several areas in the Island, mainly utilizing the funds donated by Lions world over through the Lions Clubs International Foundation (LCIF).

Especially Sri Lanka was the country that received pledges around US$ 7 million from the LCIF for the construction of houses.

The 1st phase of the project to construct 239 houses 7 sites in Jaffna was implemented. I am happy to note that 4 sites have been completed and to be handed over to the affected people.

May take this opportunity to congratulate the Tsunami Rehabilitation & Reconstruction Committee headed by PID Chuck Wijenathen and in particular PMCC S.Sivananthan who was instrumental in taking this project to the North and personally overseeing the project to completion.



கெருடாவில் மண்டபக்காடு வீடமைப்புத் திட்டம் உள் படம். (தங்கராசா செல்லப்பாக்கியம்KS F)

★ ★ ★ ★

2004இல் ஏற்பட்ட சுனாமியால் அதுவரை ஏற்படாத மோசமான அழிவு ஏற்பட்டதை யாவரும் அறிவர். இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடிச் சேவைகளை வழங்குவதில் லயன்ஸ் உறுப்பினர்கள் முன்னணி வகித்துச் செயற்பட்டனர். அதே போல் வீடிழந்தவர்களுக்கு நிதியை பயன்படுத்தி வீடுகளைக் கட்டிக்கொடுக்கும் முயற்சிலும் அவர்கள் முன்னணி வகித்தனர்.

இலங்கைக்கு 7 மில்லியன் USடொலர்கள் LCIF ஆல் வீடமைப்புக்காக வழங்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் முதல் கட்டமாக எட்டு இடங்களில் 249 வீடுகள் ஆரம்பிக்கப்பட்டு இப்போது 136 வீடுகள் கட்டி முடிக்கப்பட் டுள்ளது மகிழ்ச்சி அளிக்கின்றது.

முன்னாள் சர்வதேசப் பணிப்பாளரும் சுனாமி மீள்கட்டமைப்பு புனர்வாழ்வுக்குழுத் தலைவரான லயன் சக்.விஜேநாதன் அவர்களுக்கும் குழு உறுப்பினர்களுக்கும் விசேடமாக இந்தச் செயற்திட்டத்தை வடக்கிற்கு இட்டுச்சென்று அதனை முடிவுக்கு கொண்டுவருவதற்கு காரணகர்த்தாவான முன்னாள் கவுன்ஸில் தலைவர் லயன் எஸ். சிவானந்தனுக்கும் எமது பாராட்டுக்கள் உரித்தாகும்.

**லயன் மகேந்திர அமரசூரிய** MJF, லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் தலைவர்.



## நாட்டின் தேவைகளைப் புரிந்து கொண்டிருப்பவர்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடமைக்கும் பணியின் முதலாவது கட்டத்தைப் பூர்த்தி செய்தமைக்காக சுனாமி வீடமைப்பு (வடக்கு) திட்டக் குழுவின் தலைவருக்கும் உறுப்பினருக்கும் எனது பாராட்டுக்கள். நாம் வீடுகளை அமைக்கும் அதே சமயம் வீடுகளை இழந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும் அவசியமாகும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்காக நன்கொடை வழங்கிய உலகம் பூராகவும் உள்ள லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கு எமது நன்றி உரித்தாகும். மீளமைப்புப் பணிகளுக்கு உதவி வழங்குவதற்காக லயன்ஸ் கழகங்களின் சமாச பவுண்டேசனின் LCIF தலைவருக்கும் சபை உறுப்பினர்களுக்கும் இடையறாது கொண்டிருக்கும் உறுதிக்காகவும் எனது நன்றிகள். இந்த நாட்டின் தேவைகளைப் புரிந்து கொண்டிருக்கும் LCIF இன் பணியாளர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

மிக விசேடமாக, சுனாமி நன்கொடை நிர்வாகியும் திட்ட இணைப்பாளரும் சுனாமிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் தங்கள் நேரத்தை தங்கள் செயற்றிட்டங்களுக்கு அர்ப்பணித்தமைக்காகவும் சுனாமி அனர்த்தத்தைத் திரும்பிப் பார்க்கும் வீட்டுப் பயனாளிகள் அது தங்கள் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து தமது முன்னேற்றத்துக்கும் சிறப்பிற்கும் வாய்ப்பான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்தது எனக் கருத இயலவேண்டும் என்பது எனது பிரார்த்தனையாகும்.

**லயன் சக்.விஜேநாதன்** MJF.சுனாமி மீள்கட்டமைப்பு புனர்வாழ்வுக்குழு TRRC தலைவர்.

### சுனாமி மீள் கட்டமைப்பு புனர்நிர்மாணத் திட்டம் (TRRC)

தலைவர்: முன்னாள் சர்வதேச பணிப்பாளர் **லயன் சக்.விஜேநாதன்** MJF
நன்கொடை நிர்வாகி: முன்னாள் பல்மாவட்டத் தலைவரான **லயன் எஸ். சிவானந்தன்** MJF
மாவட்ட இணைப்பாளர்: முன்னாள் பல் மாவட்ட தலைவர் **லயன் உப்பாலி சமரசிங்க**
பல் மாவட்ட சபைப் பொருளாளர்: மாவட்ட ஆளுநர் **லயன் பி.ஜெயராஜன்** MJF
முன்னாள் சர்வதேசப் பணிப்பாளர்: லயன் சோக்க De Z. குணசேகர MJF
பல் மாவட்ட சபைத் தலைவர்: **மகேஷ் லில்குவல்** MJF

### சுனாமி வீடமைப்புத் திட்ட (வடக்கு) குழு

தலைவர் -லயன் கே.துரைராஜா (மாவட்ட இணைப்பாளர்)
செயலாளர்- லயன் எம்.சோமசுந்தரம் (மாவட்டத் தலைவர்)
நிர்வாகசபை: லயன் Dr. வி.தியாகராஜா MJF; J.P. (மாவட்ட இணைப்பாளர்)
லயன் ரி.சற்குணராஜா MJF(மாவட்ட இணைப்பாளர்)
லயன் அன்ரன் சில்வெஸ்டர் (மாவட்ட இணைப்பாளர்)
லயன் எஸ்.ரவீந்திரா (மாவட்ட இணைப்பாளர்)
லயன் வி.ஸ்ரீபிரகாஷ் (பிராந்தியத் தலைவர்)
லயன் எஸ்.ஸ்ரீநிவாசன் (மாவட்டத் தலைவர்)
லயன் கே.கமலேஸ்வரன் (மாவட்டத் தலைவர்)
லயன் ஆர்.ஜனக்குமார்
லயன் Dr.M. தங்கராஜா

"லயன்ஸ் கழகத்தினர் எமக்கு அழகான வீட்டை அ
வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக கெருடாவில் ,
அமைப்பையும் ஏற்படுத்தி தந்துள்ளனர். இவற்றின் மூல
எம்மால் முடிகிறது"



## இறைவனைச் செ

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தால் 136 வீடு
விழா நடைபெறுகிறது.
இந்த வீட்டுத்திட்டங்கள் சுனாமி வீடமைப்பு (வடக்
டுதற்குரியது.
பாதிக்கப்பட்ட மக்களுக்கு செய்யும் சேவை இ
கருத்தாகும்.யாவும் சிறப்புற எங்கள் நல்வாழ்த்துக்கள்.
இ



## லயன்ஸ் கழகங்களின் பணிகள்

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதியளிப்புப் பிரிவின் நி
பயன்தரு திட்டங்களான சுனாமி வீடமைப்புத் திட்டமும்
நவீன உபகரண வசதியுடனான சிகிச்சை பிரிவுத் திட்ட
செய்யப்படவிருப்பது அனைவருக்கும் மனமகிழ்வைத் தரு
இவ்விரு நிகழ்விலும் சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 
கழகத்தின் முன்னாள் சர்வதேசத் தலைவரும் கொமர்ஷ
அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வது சிறப்பானதாகும். இந்நி
(TRRC) சார்பாக ஒருங்கிணைந்து செயற்படுத்தும் வரவேற்புக் குழுவின் தலை
வல்ல ஆண்டவன் என்னை ஆசீர்வதிப்பாராக.
யாழ்.மாவட்டத்தின் மேம்பாட்டிற்கு லயன்ஸ் கழகங்களின் இந்த இ
கையளிக்கப்படும் நான்கு களப்பிரிவிலுள்ள 136 வீடுகளிற்கும் முடிவுறும் தறுவ
நிதியின் பெறுமதி ரூபா 22 கோடியாகும்.
சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் பயனை பாதிக்கப்பட்ட மக்கள் அனுப
புனர்நிர்மாணத்திட்ட (TRRC) அங்கத்தவர்கள் அனைவருக்கும் சுனாமி வீ
நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். யாழ்.மண்ணிலே இத்திட்டம் நி
S.சிவானந்தன் MJF அவர்களிற்கும் சுனாமி வீடமைப்புத்திட்ட (வடக்கு) குழுத்
பாராட்டுக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகிறேன்.
யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை அலகுத் திட்டத்தின்
சென்ற வருட ஆளுநர் லயன் S. ராகவன் MJF அவர்கள் என்றால் அது மி
கழகங்களின் அங்கத்தவர்கள் சார்பிலும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.
ஆளுநர் லயன் நிமல் ராஜபக்ஷ MJF அவர்களும் யாழ்.மக்களுக்கான ப
வேண்டுகிறேன். இன்றைய நிகழ்வுகளின் பிரதம விருந்தினராக கொமர்ஷல் வ
கௌரவ விருந்தினராக கொமர்ஷல் வங்கியின் ஏற்றுமதிப்பிரிவின் தலைவர் ல
நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் யாழ்.கிளையின் சிரேஷ்ட முகாமையாளராகி
மத்தியில் கொமர்ஷல் வங்கி அங்கத்தவர்களின் சமூகப்பணி ஈடுபாட்டை உ
நிறைவாக வரவேற்புக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் உபகுழுக்களின்
வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்து துணை நின்ற சகலருக்கும் எனது நன்றியி
இவ்வாறான நற்கருமங்களில் குழுவாக ஈடுபடுவார்கள் என்ற அசையா ந
அமைகிறேன்.

-மாவட்ட இணைப்பாளர்-சர்வ

## வரவேற்பு

**தலைவர் : லயன் எஸ்.ரவீந்திரா** (மாவட்
**இணைத்தலைவர் : லயன் எஸ். சிவராசே**
**நிர்வாகக் குழு: லயன் எஸ்.எஸ்.தங்கரா**
**லயன்ஸ் Dr.V. தியாகராஜா MJF, J.P.** (ம
**லயன் கே.துரைராஜா** (மாவட்ட இணை
**லயன் ரி.சற்குணராஜா MJF** (மாவட்ட இ
**லயன் வி.ஆர்.ரஞ்சன்** (மாவட்ட இணை
**லயன் கே.எம்.பத்மநாதன் MJF**(மாவட்
**லயன் எஸ்.லெனாட் MJF** (பிராந்திய அ
**லயன்ஸ் எஸ்.தவச்செல்வன்** (தலைவர்
**லயன் .வி.ஸ்ரீபிரகாஷ்** (பிராந்தியத் தலை
**லயன்ஸ் கே. கங்கைவேணியன்** (பிராந்
**லயன் வி.சுந்தரேஸ்வரன் MJF** (மாவட்
**லயன் எஸ். ஞானராஜா** (மாவட்டத் தலை
**லயன் எஸ்.ஸ்ரீநிவாசன்** (மாவட்டத் தலை
**லயன் எம்.சோமசுந்தரம்** (மாவட்டத் தல
**லயன் ஆர்.ஜனக்குமார்**
**லயன் கே.தணிகாசலம்**

பெயின்ற் வகைகளை வழங்கியோர்:
**கஜமுகன் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்**
145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மின் உபகரணங்களை வழங்கியோர்:
**கரன் இலெக்ரிக்கல்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

செயலகச் சேவைகளை
**திருமுருகன் செ**
கே.கே.எஸ் வீதி, யாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...த் திட்டத் திறப்பு விழா

...2 வீடுகள்), அல்வாய் வடமத்தி (23 வீடுகள்), அல்வாய் வடமேற்கு (33வீடுகள்)

...வதேச தலைவர் லயன் மகேந்திர அமரசூரிய

## ...வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படுகிறது




...ட்டை அமைத்துத் தந்துள்ளனர். அத்துடன், நில்லாது எமது ...டாவில் ,தெற்கு வாழ்வாதார முன்னேற்றச் சங்கம் என்ற ...ற்றின் மூலம் எதிர்காலத்தை நம்பிக்யையுடன் எதிர்கொள்ள

- தங்கராசா செல்லப்பாக்கியம்.

### ...ச் சென்றடையும் சேவை

...தால் 136 வீடுகள் கொண்ட நான்கு திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுத் திறப்பு

...மைப்பு (வடக்கு) திட்டக் குழு கட்டுவிப்பதற்கு எடுத்துள்ள முயற்சி பாராட்

... சேவை இறைவனை சென்றடையும் என்பது சுனாமி விவேகானந்தரின் ...ாழ்த்துக்கள்.

இறைபணியில் அன்புள்ள,சுவாமி சித்ரூபானந்தா.

### ...ணிகள் யாழ். மண்ணில் மேலும் சிறப்புறுக

...ப் பிரிவின் நிதிப் பங்களிப்பின் பயனாக யாழ். மாவட்டத்தில் இன்று இரு பாரிய ...த் திட்டமும் யாழ். போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை அலகின் ...ிரிவுத் திட்டமும் பூர்த்தியடைந்த நிலையில் வைபவ ரீதியாகத் திறப்பு விழா ...கிழ்வைத் தருகின்றது.

... கழகத்தின் நிதியளிப்புப் பிரிவின் தற்போதைய தலைவரும் சர்வதேச லயன்ஸ் ...ம் கொமர்ஷல் வங்கியின் தலைவருமான லயன் மகேந்திர அமரசூரிய MJF ...ாகும். இந்நிகழ்வுகளினை சுனாமி மீள்கட்டமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் ...ழுவின் தலைவராக செயலாற்றும் பணியினை செவ்வனே நிறைவேற்ற எல்லாம்

...ன் இந்த இரு திட்டங்களின் பயன்பாடும் பெறுமதியும் விளக்கும். இன்று ...வுறும் தறுவாயிலுள்ள நிர்மாணிக்கப்படவிருக்கும் வீடுகளிற்கும் ஒதுக்கப்பட்ட

...கள் அனுபவிக்க வழிசமைத்த பல்மாவட்டம்-306 சுனாமி மீள்கட்டமைப்பு ... சுனாமி வீடமைப்புத்திட்ட (வடக்கு) குழு அங்கத்தவர்கள் அனைவருக்கும் ...த்திட்டம் நிறைவேற அயராது உழைத்துவரும் நன்கொடை நிர்வாகி லயன் ...வடக்கு) குழுத் தலைவர் லயன் மு.துரைராஜா அவர்களிற்கும் இத்தருணத்திலே

... திட்டத்தின் உருவாக்கத்திற்கும் ஒருங்கிணைப்புக்கும் முக்கிய பங்காற்றியவர் ...ல் அது மிகையாகாது. அவர்களுக்கு யாழ்.வாழ் மக்கள் சார்பிலும் லயன்ஸ் ...தாகட்டும். மேலும் கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் தற்போதய ...ளுக்கான பாரிய நல்ல சேவைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என ...ொமர்ஷல் வங்கியின் தலைவர் லயன் மகேந்திர அமரசூரிய MJF அவர்களும் ... தலைவர் லயன் S.ராகவன் MJF அவர்களும் கலந்து சிறப்பிக்கும் சமூகப்பணி ...மையாளராகிய நான் வரவேற்புக் குழுவின் தலைவராக பங்கேற்பதும் மக்கள் ...பாட்டை உணரவைக்கும்.

...குழுக்களின் இணைப்பாளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் மற்றும் சகல ...து நன்றியினைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் லயன்ஸ் கழக அங்கத்தவர்கள் ... அசையா நம்பிக்கையுடன் இத்திட்டங்களின் பயனாளிகளையும் வாழ்த்தி

S. ரவீந்திரா,
...ளர்-சர்வதேச லயன்ஸ் கழகம் (மாவட்டம் 306 B 1 )
தலைவர் - வரவேற்புக்குழு.

### ...வேற்புக்குழு



...ா (மாவட்ட இணைப்பாளர்)
... சிவராஜேஸ்வரன் (பிரதி கபினற் செயலாளர்)
...தங்கராஜா (கபினற் பொருளாளர்)
...F, J.P. (மாவட்ட இணைப்பாளர்)
... இணைப்பாளர்)
...ாவட்ட இணைப்பாளர்)
... இணைப்பாளர்)
...F(மாவட்ட இணைப்பாளர்)
...ந்திய அணித் தலைவர்)
...தலைவர், வடமராட்சி லயன்ஸ் கழகம்)
...த் தலைவர்)
...ன் (பிராந்தியத் தலைவர்)
... (மாவட்டத் தலைவர்)
...டத் தலைவர்)
...டத் தலைவர்)
...ட்டத் தலைவர்)

## புண்ணிய கைங்கரியம்



ஆழிப்பேரலையால் அவதியுற்ற மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுப்பது ஒரு புண்ணிய கைங்க ரியம் ஆகும்.இந்த வகையில் சர்வதேச லயன்ஸ் கழகம் இன்று 136 வீடுகளை அமைத்துச் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கையளிப்பது பற்றியும் மேலும் 316 வீடுகளை அமைத்துக் கொண்டும் எதிர்காலத்தில் அமைக்கவும் உள்ளது பற்றி மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். வீடுகளை அமைத்துக் கொடுப்பது போலவே இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவதும் விரும்பத்தக்கது. அப்போது தான் இந்தக் குடும்பங்களுக்கு முழுமையான உதவி கிடைக்கும்.

பொருள்தட்டுப்பாடு, அதீத விலையேற்றம், போக்குவரத்துக் கஷ்டங்கள் தொடர்பான பிரச்சினைகளின் மத்தியில் இந்தப்பெருமுயற்சியை சுனாமி வீடமைப்பு (வடக்கு) குழுவின் தலைவர், உறுப்பினர்கள் மேற் கொண்டு வருகின்றனர். அவர்களின் இந்த முயற்சி வெற்றிபெற எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசி களை இறைஞ்சுகின்றேன்.

அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம்,
யாழ்.ஆயர்.



## அரச அதிபரின் செய்தி

மிக மோசமான அழிவை ஏற்படுத்திய சுனாமி அனர்த்தம் பருத்தித்துறை, வடமராட்சி கிழக்குப் பகுதி களில் பாரிய அளவில் உயிர், பொருளாதாரச் சேதங்களை ஏற்படுத்தியது. அழிந்த வீடுகளை மீள நிர்மாணிப்பதற்கு மற்றைய அரச சார்பற்ற நிறுவனங்களிடையே சர்வதேச லயன்ஸ் கழகம் முக்கிய பங்கை வகிக்கிறது. ஆரம் பத்தில் பருத்தித்துறையிலுள்ள ஆனைவிழுந்தான் பகுதியில் 200 வீடுகளைக் கட்டுவதற்காக வழங்கப்பட்ட காணிச் சுற்றாடல் காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டாலும் மனம் தளராது பொறுப்புடன் வேறு காணிகளைத் தேடிப் பெற்று உறுதியுடன் தமது நோக்கத்தை நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியது.

இவ்வாறான அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவேண்டியது எம் எல்லோரினதும் கடமையாகும். இதனை உணர்ந்து செயற்பட்டு லயன்ஸ் கழகத்தினரின் இப்பணிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன். சமூக நற் பணிகளில் ஈடுபட்டு வரும் இந்த நிறுவனம் தொடர்ந்தும் மக்கள் நலன்சார்ந்த பணிகளைச் சிறப்பாக முன்னெடுப்பதன் மூலம் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடிக்க எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

க.கணேஷ் SLAS, அரச அதிபர், யாழ்.மாவட்டம்.



## நற் சேவையாளர்களுக்கு நன்றி

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிதிப்பிரிவின் (LCIF) தலைவர் லயன் மகேந்திர அமரசூரியாவின் வருகை யாழ்.மாவட்டத்திற்கு ஒரு முக்கியமான நிகழ்வாகும்.

வடமராட்சியில் நான்கு வீடமைப்புத்திட்டம் 450 வீடுகள் இருபத்து இரண்டரைக் கோடி ரூபாவில் நிர் மாணிக்கப்பட இருக்கின்றது. அதில் நூற்றிநாற்பத்து இரண்டு வீடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எட்டுக்கோடி ரூபாவுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் ஆகிய நிகழ்விற்கு நிதியை ஒதுக்கித்தந்த நிதிப்பிரிவின் தலைவர் லயன் மகேந்திர அமர சூரிய, முன்னைய ஆளுநர் லயன் சிவானந்தன் (MJF) முன்னைய ஆளுநர் லயன் ராகவன் (MJF)) ஆகியோருக்கும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு உப கரணங்களை வழங்க இருக்கும் தற்போதைய ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ (MJF), லயன் துரைராஜா இந்த வீடமைப்புத் திட் டத்தைப் பூரணப்படுத்தியதற்கும் எனதும் எங்களதும் யாழ்.லயன்ஸ் கழகத்தினரதும் வாழ்த்துக்கள்.

லயன் எஸ்.சிவராஜேஸ்வரன், கபினற் செயலாளர் (வடக்கு).



## பல்மாவட்ட கவுன்சில் தலைவரின் செய்தி

சர்வதேச லயன்ஸ் கழகங்களின் நிர்வாகத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளை கையளிக்கும் வைபவத்தின் போது இந்தச் செய்தியை அனுப்புவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். பல கஷ்டங்களுக்கு மத்தியில் இதற்கான பணத்தை ஒதுக்கியது திருப்தியை அளிக்கிறது. முதற்கட்டமாக இன்று கையளிக்கப்படும் 136 வீடுகளுக்கு மேலதிகமாக 113 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. எல்லாமாக 440 வீடுகளைக் கட்ட உத்தே சிக்கின்றோம்.

இன்று இத் திட்டங்களைத் திறந்து வைப்பதற்கு எனது வேண்டுகோளை ஏற்று முன்னாள் சர்வதேசத் தலைவரும் தற்போதைய LCIF தலைவருமான லயன் மகேந்திர அமர சூரிய MJF அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன். இந்த வீடுகளைப் பூர்த்திசெய்வதற்காக க.துரைராஜாவின் தலைமையிலான சுனாமி வீடமைப்பு (வடக்கு) குழுவினருக்கும் எனது நன்றிகள் உரித் தாகும்.

பல் மாவட்டக் கவுன்ஸில் தலைவர் லயன் எஸ்.சிவானந்தன் MJF



## லயன்ஸ் கழகங்களின் ஒப்பற்ற சேவை

தற்போதைய LCIF தலைவரும் நேர்முந்தைய முன்னாள் சர்வதேசத் தலைவருமான லயன் மகேந்திர அமர சூரிய MJF அவர்கள் வட இலங்கையில் கட்டப்படும் 450 வீடுகளுள் முடிவடைந்த வீடுகளை கையளிக்கும் வைபவத்தின் போது மாவட்ட ஆளுநர் என்ற வகையில் இந்தச் செய்தியை அனுப்புவதில் பெரும் மகிழ்ச் சியடைகின்றேன். இந்த வீடுகளை சர்வதேச லயன்ஸ் கழகங்களின் சமாசத்தின் நிதிப்பிரிவு 306ஆம் இலக்க பல்மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட நிதியிலிருந்து அமைக்கப்பட்டவை. 306 B1 மாவட்டத்தைச் சேர்ந்த லயன்ஸ் உறுப்பினர்களுக்கு லயன் மகேந்திர அமர சூரிய MJF அவர்கள் அளித்த ஊக்கத்திற்கும் ஆதரவிற்கும் மாத்திரமன்றி வடக்கிலுள்ள பயனாளிகளுக்கு தாமே நேரில் வந்து கையளிப்பது பற்றி தமது நன்றியைத் தெரிவிக்கின்றனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவு, அதி தீவிரசிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுக்கு LCIF அளித்துள்ள நிதி உதவி மூலமும் சமீபத்திய வெள்ள நிவாரணம், சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு வீடமைப்பு ஆகிவற்றின் மூலம் லயன்ஸ் கழகங்களின் செயற்பாட்டை நன்கறிந்துள்ளனர். வடக்கைச் சேர்ந்த லயன்ஸ கழக உறுப்பினர்கள் மிகவும் கஷ்டமான சூழ் நிலையிலும் தமது பங்களிப்பைச் செலுத்தி சமூகத்துக்கு குறைந்தமட்டத்தில் உள்ளவர்களுக்கு உதவி செய்து வருகின்றனர். வடக்கிலுள்ள லயன்ஸ் உறுப்பினர்கள் சகல துறைகளிலும் ஆற்றப்படும் சேவைத் திட்டங்களில் தன்னூக்கத்துடன் ''நாம் சேவை புரிகின்றோம்'' என்ற லயன்ஸ் கழகத்தின் தொனிப் பொருளுக்கு ஏற்ப செயற்படுவது பாராட்டுக்குரியது.

லயன் நிமால் ராஜபக்ஷ MJF



## யாழ்ப்பாணத்தில் சுனாமி வீடமைப்பு

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் நிதியளிப்புப் பிரிவு (LCIF) 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி பேரழிவைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட சகல நாடுகளுக்கும் வீடுகளை புனரமைப்பதற்காக பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கிக் கொடுத்தது. இவ்வாறு இலங்கைக்குக் கிடைத்த பணத்திலிருந்து யாழ்.மாவட்டத்திற்கு 22.6 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையிலுள்ள ஆறு லயன்ஸ் மாவட் டங்களை உள்ளடக்கிய பல் மாவட்டம் 306 சுனாமி மீள் கட்டமைப்பு புனர்நிர்மாணத்திட்டம்TRRC என்ற அமைப்பை ஏற்படுத்தி ஒவ்வொன்றும் ரூபா 500, 000/= பெறுமதியான வீடுகளைக் கட்டுமாறு பணித்தது.

இந்த வீடுகளுள் 200 வீடுகள் மாத்திரமே ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டன. பின்னர் லயன் எஸ். சிவானந்தன் (MJF) அவர்களின் முயற்சியால் இந்த எண்ணிக்கை 452 ஆக உயர்ந்தது. இந்த நான்கு திட்டங்களும் உலக வங்கித் திட்டங்களாக ஆரம்பிக்கப்பட்டு அரைகுறை வேலையுடன் எம்மால் பொறுப்பேற்கப்பட்டன. இவற்றைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்ப கர்த் தாவான யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் அவர்களும் வடமராட்சிப் பிரதேச செயலரான ஆர்.வரதீஸ்வரனும் எமக்கு பல வழிகளிலும் உதவி வருகின்றனர். கொழும்பில் இருந்த வண்ணம் எமக்கு பல உதவிகளைச் செய்து வரும் TRRCதலைவர் சக்.விஜேநாதன் MJF, திட்ட இணைப்பாளரான லயன் உப்பாலி சமரசிங்க எமது மாவட்ட ஆளுநர் லயன் நிமால் ராஜபக்ஷ MJF, லயன் எஸ்.சிவானந்தன் MJF சென்ற வருட மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.இராகவன்MJF ஆகியோருக்கு எமது நன்றிகள் உரித்தாகும்.

லயன் கே.துரைராஜா, மாவட்ட இணைப்பாளரும் சுனாமி வீடமைப்புத்திட்ட (வடக்கு) தலைவரும்



...வகளை வழங்கியோர்:
...ன் கொம்நெற்
... வீதி, யாழ்ப்பாணம்.

கட்டடப் பொருள்களை வழங்கியோர்:
''சச்சி''
பொன்னாலை வீதி, ...

கட்டடப் பொருள்களை வழங்கியோர்:
''சூரி''
பருத்தித்துறை வீதி, பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## V.K.இராஜரட்ணம்

(ஸ்தாபகர், V.K.இராஜரட்ணம் அன் சன்ஸ்)

யாழ்ப்பாணம் மூளாயைப் பிறப்பிடமாகவும், சிறாம்பியடி வீதி யாழ்ப்பாணம், கோவில் வீதி, நல்லூர் மற்றும் அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட V.K இராஜரட்ணம் கடந்த 16.01.2009 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தாயுமானசக்தியின் பாசமிகு கணவரும், மூளாய் அமரர்கள் வே. குமாரசுவாமி தனபாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், மூளாய் அமரர் K.S மணியம் தம்பதியினரின் அன்பு மருமகனும் மேனகா (Newzeland), Dr. முரளி (Australia), மயூரன் (U.K), மீரா (Australia) ஆகியோரின் தந்தையும் ஜெயபாலன் (Newzeland), Dr.பர்பதா (Australia), ஜூடித் (U.K), ஸ்ரீ ரங்கன் (Australia) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அபிராமி (Newzeland), அமிர்தா, அஷ்மிதா (Australia),ஹர்ஸ், ராகுல் (U.K), கேசவன் (Australia) ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் அமரர் அரியரட்ணம் மற்றும் ரட்ணாம்பிகை அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி பரிமளா காந்தி (மூளாய்), Dr.S.அமிர்தலிங்கம் (U.K), திருமதி தேன்மொழி (India), திரு.பஞ்சலிங்கம் (Denmark) ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2009) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் பொறளை A.F.றேமன் மலர்ச்சாலையில் நடைபெற்று பி.ப.2 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

Jual21@bt internet.com
A, 2\7, Anderson flats, Park Road, Colombo - 06
தொ.பே: 011 2582662 (சி/5568031)

தகவல்:
குடும்பத்தினர்.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1055 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

32 46 52 54

மிதுனம்

16-01-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500385850 - 500406486

ஜக்பொட் பரிசு ரூபா. 3,997,100/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 219,557 | 20/- | 4,391,140/- |
| 2 இலக்கங்கள் | 20,192 | 40/- | 807,680/- |
| 1 இல. + லக்கினம் | 20,206 | 60/- | 1,212,360/- |
| 2 இல. + லக்கினம் | 1,816 | 200/- | 363,200/- |
| 3 இலக்கங்கள் | 542 | 1000/- | 542,000/- |
| 3 இல. + லக்கினம் | 48 | 10,000/- | 480,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,997,100/- | - |
| மொத்தம் | | | 8,396,380/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 262,369 | | 8,896,380/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 49,78,150/-

தொடர் இலக்கம் 400393784 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 ஜனவரி 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 500397743-2-32 |
| கொழும்பு | 500395220-3-35 |
| கண்டி | 500386017-1-16 |
| கண்டி | 500386472-9-24 |
| மொனறாகலை | 500405433-8-13 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சங்கரப்பிள்ளை முத்துக்குமாரு

(வருமான மேற்பார்வையாளர், நல்லூர் பிரதேசசபை)

மலர்வு:06 ★ 11 ★ 1952

உதிர்வு: 31 ★ 01 ★ 2008

மீளாத் துயிலடைந்து ஓராண்டு
மறைந்து போன போதிலும்
பாசமாய் வந்துரைத்த வாசகங்கள்
எம் காதுகளில் ஒலிக்கிறதே!
ஆசைமுகம் தேடியபடி உழல்கிறோம்
நேசமுடன் வந்து காட்டிட மாட்டீரோ
நீங்கள் காட்டிய பாதையிலே வாழ்ந்து
நீங்கா நினைவுகளுடன் துதிக்கின்றோம்.

V.T.S. வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

குடும்பத்தினர். (81943)

# ஒத்துமாறல்

மேல்மாகாணத்தில் கடமையாற்றும் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் யாழ்.மாவட்டக் கல்வி வலயத்திற்குள் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்பு: இல 362/86,
Pallanseena watta,
Kadduwa, Negembo. T.P. 0773068966

# கண்ணீர் அஞ்சலி



சுன்னாகம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிரி கரவெட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமான

## திருமதி பூவேந்திரன் தவமணி

16.01.2009அன்று சிவபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்: தர்மராசா (தருமர்),
விக்கினேஸ்வரி (சகோதரி- குஞ்சு),
பிள்ளைகள்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (81940)

# மரண அறிவித்தல்

## இராசையா வல்லிபுரம்

வேலணை மேற்கு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், தற்போது வவுனியா தரணிக்குளத்தில் வசித்தவருமாகிய இராசையா வல்லிபுரம் சென்ற 16.01.2009 வெள்ளிக்கிழமை மாலை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் சிவசோதியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா - சுந்தரம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னம்மாவின் மருமகனும் தருமரத்தினம்,சியாமளாதேவி காலஞ்சென்ற பரிமளாதேவி, ஞானமலர், கலைவாணி ஆகியோரின் தந்தையும் உருத்திரா, கேதீஸ்வரன், பிரபாகரன், விஜி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.01.2009) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.அம்பிகாபதி (சகோதரன்),
குணசிங்கம் (குணம்-மைத்துனர்)
[ஓய்வுபெற்ற தபால் ஊழியர், வேலணை]

முடிப்பிள்ளையார் கோயிலடி,
வேலணை மேற்கு, வேலணை.
தொ.பே. 024 4900230. (81944)

# அபிவிருத்திச்சங்க பொதுக்கூட்டம்

பண்டத்தரிப்பு, ஜன.19

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.01.2009 செவ்வாயக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் வித்தியாசாலையின் அபிவிருத்தி சம்பந்தமாக தீர்மானங்கள் எடுத்தலும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம் பெறும் என பாடசாலை அதிபர் சு.திருகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எனவே இந்தப் பொதுக்கூட்டத்திற்கு அங்கத்தவர் அனைவரும் தவறாது சமூகமளிக்கும் படியும் அவர் கேட்டுள்ளார். (130)

# விண்ணப்பம் கோரல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல உணவு கையாளும் நிலையங்களும் இந்த ஆண்டு அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பத்தினை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்து உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி



வட இலங்கையில் நஷனல் உற்பத்திப் பொருள்களின் முகவராக திகழ்ந்தவரும் LML வெஸ்பா ஸ்கூட்டரை அறிமுகப் படுத்தியவரும் ஏனைய ரேடியோ, ரீவி, அம்பிளிபயர் விற்பனையில் முன்னணி வர்த்தகரும் மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு (அன்ரசன் தொடர் மாடியில்) வசிப்பிடமாகவும் கொண்ட

## V.K.இராசரத்தினம்

அவர்கள் மீளாத் துயில் கொண்டதை கேள்விப்பட்டு நாம் மிகவும் கலங்கி நிற்கின்றோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா கண்ணபிரானின் பாதாரவிந்தங்களைச் சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (81920)

கரன் ஜுவலர்ஸ்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 13 ★ 12 ★ 1932



மறைவு 20 ★ 12 ★ 2008

## அமரர் சபாபதிப்பிள்ளை கனகரட்ணம்

அன்போடும் பண்போடும் அகமதைச் சிறப்பித்தீர்
கண்போல் எமைக் காலமெலாம் காத்திருந்தீர்
இன்று விண்ணகத்தை உன்னகமாய் ஆக்கிவிட்டீர்
CÛ Ps n ÚÁß x n n uð@Ú A-Áß Pözyk Á õß

20.12.2008 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும் விளக்கின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.01.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.

குடும்பத்தினர். (81759)

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 * 02 * 1944



உதிர்வு 19 * 01 * 2008

## அமரர் இராசப்பு அல்பிரட் அருமைநாயகம்

(19.01.2009)

நாட்டுக்கு நல்ல மகனாய்
வீட்டிற்கு நல்ல தலைவனாய் வாழ்ந்த
எங்கள் தந்தையே!
உன் பிள்ளைகளை கூண்டுக்கிளிகள்போல்
அன்பும் ஆதரவும் காட்டி வளர்த்தாயே!
உன் விழிகள் என்ற விளக்கில்
எமக்கு வாழ்க்கை என்னும் ஒளியை தந்தவரே
எங்கு சென்றாயோ!
எம் வாழ்க்கை இருண்டு விட்டது
மீண்டும் எம் வாழ்க்கை
பிரகாசமாய் ஒளிராதோ என்று
ஏங்கும் எங்கள் உள்ளங்கள்
ஓராண்டு மறைந்தாலும் எம் நினைவுகளும்
நீங்காது எம் தந்தையே!

மேரி இல்லம்,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

குடும்பத்தினர். (81893)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எடு
# யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித் துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் மற்றொரு பகுதி இங்கு பிர சுரமா கின்றது.

## புவனேந்திரன் ரசிதா
பெறுபேறு: 3ஏ (செங்குந்தா இந்துக் கல்லூரி)



என்னுடைய அப்பா கூலிவேலை செய்து தான் என்னையும், என்னுடைய சகோதரர் களையும் கல்வி கற்க வைத்தார். கூலி வேலை என்பதால் போதிய வருமானம் அப்பாவுக்குக் கிடைப்பதில்லை. இதனால் எப்போதும் வறுமை எங்களுடன் இணைந்தே இருந்தது. நான் ஆறாம் ஆண்டில் இருந்தே செங் குந்தா இந்துக் கல்லூரியிலேயே கல்வி கற்று வருகின்றேன்.

தரம்10 வரை நான் ஒரு சராசரி மாணவியா கத்தான் இருந்தேன். படிப்பில் பெரிதாக அக் கறை காட்டவும் இல்லை. இந்நிலையில்தான் எமது வகுப்பாசிரியையாக திருமதி கனகநாய கம் வந்து சேர்ந்தார். அவர் எமது வகுப்பாசிரி யையாக வந்ததுதான் என் வாழ்வில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது என நம்புகிறேன். கனகநாயகம் ரீச்சர் காட்டிய அன்பும், ஆதரவும், ஊக்கமும் என்னை யுமறியாமல் கல்வி மீது அளவுகடந்த ஈடுபாடு கொள்ள வைத்தது. அதன்பின்னர் வகுப்பில் முன்னணி மாணவிக ளில் ஒருத்தியாக நானும் மாறினேன். இதனால் ஜி.சீ.ஈ [சா/த] பரீட்சையில் 6அ,ஆ, 3 இ என்னும் சிறப்பான பெறுபேற்றை எட்ட முடிந் தது.

சாதாரணதரப் பரீட்சையில் உயர்வான பெறு பேற்றை அடைந்த பல மாணவர்கள் கணிதம், விஞ் ஞானம் ஆகிய துறைகளைத்தான் தெரிவு செய்வது வழமை. எனினும் அதில் அனேகமா னோர் உயர்தரத்தில் மோசமான பெறுபேறுக ளையே பெற்றுவந்தனர். இதனால் பலரின் ஆலோசனையைக் கருத்திற்கொண்டு, கலைப் பிரிவில் கல்வி பயில்வதெனத் தீர்மானித்தேன்.

இங்கே இன்னொரு விடயத்தையும் குறிப் பிடுவது பொருத்தமாக இருக்கும். எங்களுடைய பாடசாலையில் - செங்குந்தா இந்துக் கல்லூரி யில் - சாதாரணதரப் பரீட்சையில் உயர் பெறு பேற்றைப் பெற்ற மாணவர்கள் உயர்தரத்திற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள முன்னணிப் பாடசாலை களுக்குச் சென்று விடுவார்கள். எமது பாடசா லையில் உயர்தரக் கல்வியைக் கற்பது கௌரவக் குறைவு என்றோ, உயர் பெறுபேற்றைப் பெற்றுக் கொள்ள முடியா தென்றோ அவர்கள் நினைத்திருக்கக் கூடும். எனினும் நான் உயர்தரத்தை எமது பாட சாலையிலேயே தொடர்ந் தும் கற்றேன். எனக்கு அதிபர், ஆசிரியர்கள் எல்லோரும் உறுதுணையாக இருந் தார்கள். நான் அரசியல் விஞ்ஞானத்தையும் ஒரு பாடமாகப் பயின்றபோது இளங்கோ ஆசிரியர் எனக்கு சிறப் பான முறையில் போதித்தார்.

இக்காரணிகளால்தான் என்னால் தமிழ், இந்து நாகரிகம், அரசியல் ஆகிய மூன்றுபாடங் களிலும் அச்சித்தியினையும், மாவட்டத்தில் 19ஆவது இடத்தினையும் பெறமுடிந்தது. இவ் வாறு 3அ எடுக்கு மளவிற்கு நான் படித்ததற்கு என்னுடைய அப்பா வும், ஒரு முக்கிய காரணம். எங்கள் அயலவர்கள் எல்லோரும் தங்களு டைய பிள்ளைகள் பல் கலைக் கழகத்தில் படிக்கிறார் கள் என்று பெருமையாகச் சொல் லுவதுபோல எனது அப்பாவும், என்னு டைய மகளும் பல்கலைக் கழகத் தில் படிக்கிறாள், என்று சொல்ல வேண்டுமென விரும்பினேன். அது இப்போது நிறைவேறி விட்டது.

இலத்திரனியல் ஊடகங்களில் அறிவிப்பாள ராக வரவேண்டும் என்பதும் என்னுடைய ஆசை களில் ஒன்று. அதுவும் நிறைவேறும் என நம்பு கின்றேன்.

உயர்தரப் பரீட்சையின்போது தமிழ் பாடத்துக்கு நான் திருப்திகரமாக விடையளிக்கவில்லை. இத னால் கொஞ்சம் பயமாக இருந்தது. ஆனால் பரீட் சையின் பெறுபேற்றை எனது தங்கை வந்து சொன்ன போது அந்தப்பயம் மறைந்து விட்டது. இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்திருந்தால் மாவட்டத்தில் முதல் பத்து இடங்களுக்குள் வந் திருக்கலாமே என்று இப்போது தோன்றுகின்றது.

சந்திப்பும், படங்களும்: ஔண்யன், ஜெயந்தன். 2

## கு.கணாரூபன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)
பெறுபேறு: 3ஏ மாவட்டநிலை: 2



வெற்றி நிச்சயம், தொண்டைமானாறு தவணைப் பரீட்சை போன்றவற்றின் அடைவுகளைக் கொண்டு மாவட்ட நிலை 5க்குள் கண்டிப்பாக வந்துவிடு வேன் என எதிர்பார்த்தேன். ஆனாலும் இறுதிப் பரீட்சையில் ஏற்பட்ட சறுக்கல்கள் காரணமாக மாவட்டநிலை பத்தைத் தாண்டிவிடும் என்று நினைத் திருந்தேன். ஆனால் மாவட்டநிலை 2 என்பது ஒரு இன்ப அதிர்ச்சிதான்.

பரீட்சை பற்றிய மிக அதிக எதிர்பார்ப்புக்கள் என்னுள் அழுத்தத்தை அதிகரித்துவிட்டிருந்தன. அதன்காரணமாக பரீட்சை நெருங்கியவுடன் சாதாரணமாக இருக்கமுடியாமல் போனது என் துரதிஸ்டமே. முதல் பரீட்சையான தூயகணிதத்திலேயே பயங்கர சறுக்கல். அதிகபட்சம் அறுபத்தைந்து புள் ளிகள்தான் என்றாகி விட்டது. உடைந்துவிட்டேன். ஏனெனில் நான் மிக அதிக புள்ளிகள் வாங்குவது இந்த பாடத்தில்தான். அன்றிரவு நான்பட்ட சோகத் தைப் புரியவைக்க பின்னணியில் 50 வயலின்களா வது தேவைப்படும். என் தாயாரும் நண்பர்களும் உற்சாகப்படுத்தவில்லையெனின் அடுத்தடுத்த பாடங்களிலும் இதன் தாக்கம் வியாபித்திருக்கும். நல்லவேளையாக பிரயோக கணிதம் கைகொடுத்து தவியது. பின்வந்த பௌதிகவியல், இரசாயனவி யல் பரீட்சைகளில் ஒருவாறாக நிமிர்ந்துவிட் டேன். பயிற்சிப் பரீட்சைகளில் கவனயீனப் பிழை களை இயன்றளவு குறைத்து வந்திருக்கிறேன். ஆனால் முக்கியமான உயர்தர இறுதிப் பரீட் சையில் கவனயீனம் என் காலைவாரி மொத்தமாக முப்பது முப்பத்தைந்து புள்ளி களை அநியாயமாக பறித்துவிட்டது. காரணம் பரீட்சைப் பதட்டமும் அளவு கடந்த எதிர்பார்ப்பும் அதனால் வந்த அவசர மும் தான் என நினைக்கிறேன்.

எதிர்பார்ப்புகளை ஏமாற்றிக்கொண்டு ஏடா கூடமாய் ஏதும் வந்துவிடுமோ என்று கடைசி நிமி டம் வரை சிறிது பயம் இருந்தது. பெறுபேறு வந்த வுடன் இணைந்த கணித தேர்ச்சியைத்தான் பர பரப்போடு தேடினேன். அகில இலங்கை நிலை 41. ஆனால் மாவட்டநிலை 2 என்பது எனக்கு மட்டு மல்ல மாவட்டத்துக்கே அதிர்ச்சிதான். இம்முறை யாழ்.மாவட்ட விஞ்ஞானத்துறைப் பெறுபேறுகள் பின்னடைவு கண்டுவிட்டன.

என்னுடைய வெற்றிக்கு மூலகாரணமே என் தாயார் தான். அவர் ஓர் ஆசிரியையாக இருந்த போதிலும் எந்த வீட்டுவேலையையும் எனக்கு மிச்சம் வைத்த தில்லை. அனைத்து வகையிலும் எனக்கு உத வியது என் அன்னைதான். எனது பாடசாலையான யா/ சுழிபுரம் விக்ரோறி யாக் கல்லூரியின் அதி பர் திருமதி வேலுப் பிள்ளை, ஆசிரியர்கள்- குறிப்பாக எனது வகுப்பாசிரியரும் இரசாயனவியலாசிரிய ருமான திரு.சிவயோகலிங்கம் -போன்றோரின் கவனிப்பும், வழிகாட்டலும், புதிய விஞ்ஞானக் கல்லூரி ஆசிரியர்களின் அறிவு புகட்டும் திறமை, வெற்றிநிச்சயம் பரீட்சை, நண்பர்களின் ஆதரவும் எனக்குக் கிடைத்தன.

2007இல் யாழ்ப்பாண சூழ்நிலையின் இறுக்கம் காரணமாக ஏறக்குறைய மூன்று மாதங்களை விண டித்து கொழும்பில் தங்கி வெளிநாடு செல்ல முயற் சித்து மீண்டும் திரும்பிவந்தபோது ஊக்கமளித்து என்னை மீண்டு வர இடமளித்தது என் பாடசாலை சமூகம். 2008இல் ஒருமாத காலமாய் தொடர்ந்த சுபாலக் குத்தினால் அவதியுற்றபோது அதிபர், வகுப் பாசிரியரின் உதவியுடன் யாழ்.போதனா வைத்திய சாலை 'வாட்'இல் ஒரு வாரம் தங்கி சிகிச்சை பெற்றி ருக்கிறேன். இவை என்னை என்றென்றும் கல்லூரிமாதா விற்குக் கடமைப்பட வைக்கக் கூடியன.

2002இல் சமூகக்கல்விப் பொது அறிவுப்போட்டி மாகாணமட்டம் 2ஆம் இடம் பெற்றுள்ளேன். 2006இல் உடனடியாக ஆயத்தம் செய்து ஆற்றும் ஆங்கிலப் பேச்சு மாவட்டமட்டத்தில் 2ஆம் இடமும், சிறுகதை, கட்டுரைப் போட்டிகளில் வலயமட்டத்தில் முதலா மிடமும் கிடைத்தன. 2002இல் யாழ்.மாவட்ட வன் பந்துத் துடுப்பாட்ட அணியில் பங்குபற்றி தம்புள்ள சென்று விளையாடி இருக்கிறேன். பாடசாலை உதைபந்து, கரப்பந்து அணிகளிலும் இடம்பெற்றி ருக்கிறேன்.

நான் எதிர்காலத்தில் இலத்திரனியல் துறை யில் பொறியியலாளராக வர விரும்புகின்றேன்.

மாணவர்கள் நன்கு விளங்கிக்கொள்ளுதல், தொடர்புகளை ஆராய்தல், தினசரி சுயகற்றலுக்கு நேரம் ஒதுக்குதல், சுயமதிப்பீடு, மற்ற வருக்கு விளங் கப்படுத்தல் ஆகிய தன்மைகளையும், செயற்பாடு களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். மேலுள் ளதில் மூன்றாவதை மட்டும் நான் செய்யவில்லை என்பதை நினைத்து இப்போதும் வருந்துகிறேன். காலம் யாருக்கும் காத்திருக்காது. இலங்கையில் உயர்தரப்பரீட்சை பலருக்கு வாழ்க்கையைத் தீர் மானிப்பதாகவே உள்ளது. ஆகவே இதனுடைய முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு உங்களுக் கும் பிறருக்கு உதவுங்கள்.

# ராசி பலன்

19-01-2009முதல்
25-01-2009 வரை
பொ.சந்திரலிங்கம்

### மேஷம்



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத்தடை விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழிற்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### இடபம்



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உற வினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலம். நல்ல வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை யில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

### மிதுனம்



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக் கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும்; தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர் வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். மனஅமைதி இருக்காது.

### கடகம்



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாக னம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ் டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

### சிம்மம்



மகம், பூரம், உத்தரம் 1

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக் கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ் டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற் றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மனஅமைதி இருக்கும்.

### கன்னி



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப்பற்றாக்குறை நில வும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நல மில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னே றும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

### துலாம்



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியசித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமைய லாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகை வரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறை வேறும். மன அமைதி இருக்கும்.

### விருச்சிகம்



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற் றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நல மில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாண வர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகை வரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம்உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

### தனுசு



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகிஇருப்பர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

### மகரம்



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக் கும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டு வர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை யுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறை யலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்காது.

### கும்பம்



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியசித்தியுண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசு வாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு காலதாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக் கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறா. மன அமைதி இருக்கும்.

### மீனம்




பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி


காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவிசெய்வர். தாய் நலம். தந்தைநலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டு வர். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடு களால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் [illegible]. தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனஅமைதி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறாலில் கொலஸ்திரோல் உண்டா?








**கேள்வி:** எனது வயது 38. ஆண். எனக்கு கெட்ட கொலஸ்திரோல் (LDL) அதிகமாக இருந்து, மருந்து செய்ததில் குறைந்துவிட்டது. நான் இறால் சாப்பிடுவது உகந்ததா? இதனால், கெட்ட கொலஸ்திரோல் அதிகரிக்குமா?

**பதில்:** இரத்தத்தில் இருவகையான கொலஸ்திரோல்கள் உண்டு. குறைந்த அடர்த்தியான கொழுப்பு புரத (Low Density Lipo-proteins) கொலஸ்திரோல் LDL எனப்படுகிறது. மற்றும் அதிக அடர்த்தியான கொழுப்பு புரத கொலஸ்திரோல் HDL எனப்படுகிறது.

இரத்த குழாய்களில்- நாடிகளில் (Arteries) கொழுப்பை படியச்செய்து அவற்றை அடைக்கும் செயலுக்கு உறுதுணையாக இருப்பது LDL கொலஸ்திரோல் என்பதால் இதனை 'கெட்ட' கொலஸ்திரோல் என்கின்றார்கள். இதற்கு எதிர்மாறாக HDL கொலஸ்திரோல் இரத்தக் குழாய்களை துப்புரவாக்குகின்றது. இதனால், 'நல்ல' பெயரை இந்த கொலஸ்திரோல் சம்பாதித்துக் கொண்டது. மற்றைய Shell fish எனப்படும் ஒருவகை கடல் உயிரினங்களை விட இறால் குறைந்த அளவு கொலஸ்திரோல் சத்துக் கொண்டது. கணவாயில் அதிக கொலஸ்திரோல் உண்டு. இறாலில் உள்ள கொலஸ்திரோல் LDL அளவை அதிகரித்தாலும் அத்தோடு சேர்ந்து HDL அளவும் அதிகரிக்கிறது.

மேலும் இறாலில் Saturated Fat எனப்படும் கொலஸ்திரோலை அதிகரிக்கும் கொழுப்பு மிகக்குறைவாகவே காணப்படுகிறது. மேலும் சொல்லப்போனால் இறால் LDL:HDL செறிவுவிகிதத்தை (Ratio) நல்லதிசையில் அதிகரித்து Triglycerides என்கின்ற இன்னொரு தீதான கொழுப்புச் சத்தையும் குறைக்கின்றது. மேலும் இறாலில் இருதயத்துக்கு உதவுகின்ற Omega-3 கொழுப்பு அமிலச்சத்தும் உள்ளது. எனவே, இருதயத்துக்கு உகந்த உணவுத்தொகுதியில் இறாலும் சேர்க்கப்பட்டுள்ளது. என்றாலும் நல்லது என்று இறாலை அதிகமாக உணவில் சேர்க்காமல் கட்டுப்பாடாக உங்கள் உணவில் சேர்த்துவருவது கெடுதல் இல்லை என்பதே எனது அபிப்பிராயம்.

*

**கேள்வி:** வயது 25. இரண்டுமாத கர்ப்பமாக இருக்கின்றேன். சிறுநீர் பரிசோதனைகளும் ஜெர்மன் தட்டம்மை, Hepatitis, எச்.ஐ.வி. பரிசோதனைகளும் செய்துள்ளேன். எனது சிறுநீரில் சிறிதளவு செவ்விரத்த அணுக்கள் இருப்பதாக கண்டறிந்தார்கள். ஆனால், சீழ்த்தன்மையோ, சீனிச்சத்தோ இல்லை. எனது இரத்தச்செறிவு Hae-moglobin 11.5gm. இந்த சிறுநீர்ப்பிரச்சினை கருவிலுள்ள சிசுவுக்கு ஆபத்தை ஏற்படுத்துமா?

**பதில்:** ஓரிரு இரத்த அணுக்கள் சிறுநீரில் காணப்படுவது சாதாரணமானது. முக்கியமாக சமீபத்தில் சிறுநீர்த்தொற்று ஏற்பட்டிருந்தால் சாத்தியம் அதிகம். ஆனால், தொடர்ந்து சிறுநீர்ப்பரிசோதனை செய்யும்போது சிறுநீரில் இரத்தம் அல்லது இரத்த அணுக்களின் எண்ணிக்கை அதிகரித்துப்போவது காணப்பட்டால் சிறுநீர்த் தொற்று, சிறுநீரகக் கற்கள் போன்ற பிரச்சினைகளை கவனத்தில் எடுக்க வேண்டும். சிறுநீரில் இரத்தம் சம்பந்தமான விஷயங்கள் காணப்படுவது கருவுக்குப் பிரச்சினை ஏற்படுத்தாது. ஆனால், இந்த விஷயங்கள் ஏற்படுவதன் மூலகாரணம் சிலவேளை கருவைப் பாதிக்கும். எனவே, இப்படி இரத்த அணுக்கள் காணப்படுவதன் மூலகாரணத்தைக் கண்டறிய வேண்டும். ஒரு மகப்பேற்று விசேட வைத்திய நிபுணர் அல்லது சிறுநீரகம் சம்பந்தமான வைத்தியநிபுணர் (Urologist) ஒருவரின் ஆலோசனை, Scan பரிசோதனை, மறுபடியும் சிறுநீர்ப் பரிசோதனைகள் என்பன உங்கள் விஷயத்தில அவசியம்.

*


**கேள்வி:** வயது 25. அடிக்கடி எனது மேல் கண்[illegible] களாக தொ[illegible] மருந்துகள் உபயோகித்தேன். குணமாகியது. ஓரிரு வாரங்களில் கீழ்க் கண்மடலில் தொற்றுஏற்பட்டது. டாக்டரிடம் காட்டியபோது இது Stye என்கின்ற 'கண்கட்டி' தொற்று என்று கூறி உள்ளுக்குள் உபயோகிக்க மாத்திரைகள் தந்தார். அதற்கு குணமாகியது. கடந்தவாரம் திரும்பவும் இந்தத் தொற்று எனக்கு ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்ன? பரிகாரம் கூறவும்.

**பதில்:** கண்களில் ஏற்படும் தொற்றுகளுக்கு முக்கியகாரணம் கண்களை கசக்குவதுதான். நிறைய நேரம் வாசித்தல், நிறையநேரம் தொலைக்காட்சி பார்த்தல் என்பவற்றால் கண்கள் களைப்படையும் அல்லது குறைந்த வெளிச்சத்தில் பணிபுரியும்போது அல்லது கண்களுக்கு அருகாமையில் வைத்து பணிபுரியும்போது (தையல் வேலைகள், கடிகாரம் திருத்துதல்) கண்கள் களைப்படையும். அதேவேளையில் பார்வைக்குறைபாடு இருப்பினும் கண்கள் களைப்படையும். இவ்வேளைகளில் எங்களை அறியாமலே எமது கைகளால் கண்களைக் கசக்குகின்றோம்.

முதலில் கண்வைத்தியரிடம் காட்டி ஏதாவது பார்வைக்கோளாறுகள், முக்கியமாக Myopia எனப்படும்

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிட்டப் பார்வை கோளாறு உள்ளதா என்பதை கண்டறியவும். நீங்கள் பணிபுரியும் இடங்களில் போதிய வெளிச்சம் இருக்கவேண்டும். செய்யும் பணிகளை கண்களுக்கு மிக அருகில் வைத்து செய்யவேண்டாம். கண்களை முக்கியமாக கண்மடல்களை தினமும் Baby Shampoo கலந்த நீரில் பஞ்சுத்துண்டை நனைத்து கழுவி வரவும். அதுபோல் வெந்நீரில் நனைத்த பஞ்சினால் ஒத்தடம் கொடுக்கவும். கண்மயிரின் அடியில் சீழ்கட்டிய பரு இருந்தால் அந்தக் கண்மயிரைப் பிடுங்கி Antibiotic கிருமிகொல்லி கண்பூச்சு பூசவும். தினமும் இரவில் கண்மடல்களுக்கு கிருமிகொல்லி கண்பூச்சு மருந்து பூசி படுக்கைக்கு செல்லவும். கண்களுக்கு செல்லும் கிருமிகள் உங்கள் கைகளிலிருந்துதான் பரவுகின்றன என்பதை கருத்தில் கொண்டு, கைகளைச் சுத்தமாக, சுகாதாரமாக வைத்துக் கொள்ளவும்.



*

**கேள்வி:** பெண். வயது 35. கடந்த இரண்டு வருடங்களாக சிறுநீர்த் தொற்றினால் கஷ்டப்படுகின்றேன். ஆரம்பத்தில் மருந்து செய்யும்போது குணம் கண்டாலும் குறுகிய காலத்தில் திரும்பவும் சிறுநீர்த்தொற்று ஏற்படுகிறது. இரண்டு, மூன்று தடவைகள் இப்படியாகி விட்டது. அத்துடன் சாதாரணமாக என்னை அறியாமலே சிறுநீர் கசியும் பிரச்சினையும் உள்ளது. இதனால், சங்கடப்படுகின்றேன். பரிகாரம் கூறவும்.

**பதில்:** வருடத்துக்கு இரண்டு மூன்று தடவைகள் சிறுநீர்த்தொற்று பெண்களுக்கு ஏற்படுவது சாதாரணமானதொன்று. உடலுறவுகொள்ளும்போது சிறுநீர்ப்பாதை அழற்சியுறுவதாலே சிறுநீர்த்தொற்று ஏற்பட வசதியாகிறது. சாதாரண Antibiotics மருந்துகளால் இதனைக் குணமாக்கமுடியும். சிறுநீர்த்தொற்றுக் காலங்களில் சிறுநீர்க்கசிவு, சாதாரணமாக நடைபெறும் விஷயம். சிறுநீர்த் தொற்று குணமாகிய பின்னர் கசிவு நின்றுவிடும். சிறுநீர்த்தொற்று இல்லாதபோது சிறுநீர்க் கசிவு ஏற்படின் அதற்கு சிறுநீர்ப்பையினது அதீத செயற்பாடு (Over activity) அல்லது சிறுநீர் பையின் வால்வு (Sphincter) பெலவீனம் என்பவை காரணமாக இருக்கலாம். சிறுநீர்ப்பையின் அதீத செயற்பாடு வயதானவர்களுக்கு ஏற்படுவது சகஜம். சிறுநீர்ப்பை Sphincter பிரச்சினை அதிக பிரசவங்கள் கண்ட பெண்களிடம் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, உங்கள் பிரச்சினைக்கு பல காரணங்கள் இருக்கலாம் என்பதை இப்போது புரிந்திருப்பீர்கள். எனவே, Urologist என்கின்ற விசேட வைத்திய நிபுணர் ஒருவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மீதான குண்டுத் தாக்குதல்களை தன்னிச்சையாக நிறுத்தியது இஸ்ரேல்

டெல் அவிவ், ஜன. 19

ஹமாஸ்களுக்கு எதிராக கடந்த மூன்று வாரங்களாக காஸா மீது தான் மேற்கொண்டுவந்த தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தியுள்ளது. அத்துடன் தன்னிச்சையான போர்நிறுத்தமொன்றையும் பிரகடனப்படுத்தியுள்ளது.

''இஸ்ரேல் தனது இலக்கை அடைந்துவிட்டது. இஸ்ரேல் மீது தொடர் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வந்த ஹமாஸ்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்'' என இஸ்ரேலியப் பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட் அறிவித்துள்ளார்.

போர்நிறுத்தப் பிரகடனம் செய்துள்ள ஒல்மேர்ட், ''காஸாவுக்குள் புகுந்த எமது துருப்புகள் உடனடியாக மீளப் பெறப்படமாட்டா. தற்போதைக்கு அவை, காஸாவுக்குள்ளேயே தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும்'' என்றும் தெரிவித்துள்ளார். அதே வேளை, ''ஓர் இஸ்ரேலிய வீரரைக்கூட நாம் காஸாவுக்குள் அனுமதிக்கமாட்டோம்'' என ஹமாஸ்கள் தெரிவித்துள்ளார்கள்.

இஸ்ரேலின் போர்நிறுத்தப் பிரகடனத்தை அமெரிக்கா பெரிதும் வரவேற்றுள்ளது. அனைத்துத் தரப்புகளும் உடனடியாகத் தாக்குதல்களையும், விரோத நடவடிக்கைகளையும் கைவிட்டுவிடும் எனத் தான் எதிர்பார்ப்பதாக அது தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் போர்நிறுத்தப் பிரகடனம் தமக்கு ஆறுதல் அளிக்கின்றது என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் தெரி வித்துள்ளார். ''காஸாவில் நிலைகொண்டுள்ள அனைத்து இஸ்ரேலியத் துருப்புகளையும் மீளப் பொறுவதற்கு போர்நிறுத்தப் பிரகடனம் முதல்படியாக அமைய வேண்டும்'' என்றும் அவர் கோரியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தை அடுத்து, இஸ்ரேலியப் பிரதமர் ஈகுட் ஒல்மேர்ட் தாம் நிகழ்த்திய தொலைக்காட்சி உரையின்போது, இந்த போர்நிறுத்தத்தையும் பிரகடனப்படுத்தினார். ''இஸ்ரேலின் இலக்குகளை நாம் அடைந்துவிட்டோம். அவற்றிற்கு மேலும் சென்றுள்ளோம்'' என அவர் கூறினார்.

எமது துருப்புகள் காஸாவுக்குள் தொடர்ந்தும் நிலைகொண்டிருக்கும். ஹமாஸ்கள் ஏவுகணைத் தாக்குதல்களை முற்றாகக் கைவிட்டால் மாத்திரம், படை வாபஸ் குறித்து பரிசீலிக்கப்படும்'' என்றும் அவர் தெரிவித்தார்.

ஹமாஸ் போராளிகள் ரொக்கெட் தாக்குதல்களை மீள ஆரம்பித்தால், எமது பதிலடிகளும் ஆரம்பமாகிவிடும். அத்துடன் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களைவிட பன்மடங்கு வீறுகொண்டவையாக இருக்கும். கோரிக்கைகளும், அழுத்தங்களும் நிராகரிக்கப்பட்டுவிடும்'' என்றும் ஈகுட் ஒல்மேர்ட் தமது உரையில் மேலும் தெரிவித்துக்கொண்டார்.

கடந்த டிசெம்பர் 27 ஆம் திகதி இஸ்ரேலால் ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதல்களுக்கு ஏறத்தாழ 1,200 பலஸ்தீனர்கள் பலியாகியுள்ளார்கள். டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். இஸ்ரேல் தரப்பில் 13 பேர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆப்கானில் கார்க்குண்டுத் தாக்குதல் அமெ. சிப்பாய் உட்பட நால்வர் பலி

காபூல், ஜன. 19

''காபூலில் இவ்வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தாக்குதல் ஒரு கோழைத்தனமானது. இது ஆப்கானில் எமது சேவையைத் தடுத்து விடாது'' என ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் பிராங்வோல்ட்டர் ஸ்டின்மிர் தெரிவித்தார்.

தற்போது ஆப்கானில் 3,200 ஜேர்மன் துருப்புகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலான துருப்புகள் ஆப்கானின் வடக்கில் நிலைகொண்டுள்ளன. இச்சம்பவத்திற்குப் பின்னர், கிழக்கு நங்கர்ஹார் மாகாணத்தில் இடம்பெற்ற பிறிதொரு குண்டுத் தாக்குதலில், ஒரு சிவிலியன் கொல்லப்பட்டார். மூன்று பொலிஸார் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர். இவ்விரு தாக்குதல்களுக்கும் தலிபான் தீவிரவாதிகள் உரிமை கோரியுள்ளார்கள் என ஓர் உள்ளூர் அதிகாரி குறிப்பிட்டார்.

# ஆபிரகாம்லிங்கன் பாதையில் ஒபாமா பதவி ஏற்புக்கு ரயில் பயண வருகை

வாஷிங்டன், ஜன. 19

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பராக் ஒபாமா, நாளை செவ்வாய்க்கிழமை நிகழும் தமது பதவியேற்பு வைபவத்தில் கலந்துகொள்வதற்காக பிலடெல்பியாவிலிருந்து விசேட ரயிலில் வாஷிங்ரன் வந்தடைந்தார்.

''அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான ஆபிரகாம் லிங்கனின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒபாமா இந்த ரயில் பயணத்தை மேற்கொண்டுள்ளார். அத்துடன் ஒபாமாவின் மனதைக் கவர்ந்த மாபெரும் தலைவர்களில் ஆபிரகாம் லிங்கனும் ஒருவர். இதனை அவரே அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளார்'' என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

''பராக் ஒபாமா அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சமீபத்தில் தம் குடும்ப சகிதம் ஆபிரகாம் லிங்கனின் ஞாபகார்த்த சின்னக்கூடத்துக்கு விஜயம் செய்து அஞ்சலி செலுத்திவிட்டுத் திரும்பியுள்ளார். ஆபிரகாம் லிங்கன் கறுப்பர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்தவராவார்'' என்றும் அவர்கள் கூறினார்கள்.

ஒபாமா தம் குடும்ப சகிதம் பயணித்த விசேட ரயில், நகரங்களுக்கூடாகவும், ரயில் நிலையங்களைக் கடந்தும் சென்றது. ஆங்காங்கே பெருந்தொகையான ஆதரவாளர்கள் திரண்டு நின்று மகிழ்ச்சிக் கோஷம் செய்து குதூகலித்தார்கள். ரயிலின் முகப்பு ஒபாமாவின் உருவப்படத்தைத் தாங்கியிருந்தது.

80 வருட காலம் பழைமை வாய்ந்த இந்த ரயில், பிலடெல்பியாவின் 30 ஆவது வீதி ரயில்வே நிலையத்திலிருந்து வாஷிங்ரனுக்கு 137 மைல் (220 கிலோ மீற்றர்) பயணத்தை ஆரம்பித்தது. பாதுகாப்பு அதிகாரிகளும் ஊடகவியலாளர்களும் இதில் நிறைந்திருந்தார்கள்.

பராக் ஒபாமா ரயிலுக்குள் ஏறுவதற்கு முன்னர், ''சாதாரண அமெரிக்கர்களின் அபிலாஷைகளையும், நம்பிக்கையையும் நான் மனதில் சுமந்தவாறு எனது வாஷிங்டன் விஜயத்தை மேற்கொள்கிறேன்'' என்றார். ''அமெரிக்காவை மாற்றியமைக்க வேண்டுமென்ற எமது கனவை நனவாக்க, இத்தேர்தல் ஒரு இறுதி முடிவாக இருக்காது. இது ஒரு ஆரம்பம் தான்'' என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

இவர் பயணித்த ரயில் சனிக்கிழமை இரவு வாஷிங்ரன் யூனியன் ரயில் நிலையத்தை வந்தடைந்தது. அவர் பதவியேற்கும் அலுவலகத்திற்கு மிக அண்மையிலேயே இந்த நிலையம் அமைந்துள்ளது.

## ஒபாமாவுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது

வாஷிங்ரன், ஜன. 19

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா நாளை செவ்வாய்க்கிழமை பதவி ஏற்கும் போது, அவர் தம்மால் சுட்டுக் கொல்லப்படுவார் என மிரட்டல் விடுத்தவர் கைது செய்யப்பட்டார்.

இணையத்தளம் ஒன்றில் இந்த நபர் இம்மிரட்டலை விடுத்திருந்தார். இது தொடர்பாக, சட்ட அமுலாக்கல் துறையினருடன் இணைந்து பொலிஸார் தீவிர விசாரணையை மேற்கொண்டனர்.

ஒபாமாவுக்கு மிரட்டல் விடுத்தவர் ஸ்டீவன் ஜோசப் கிறிஸ்தோபர்தான். இவர் விஸ்கான்சின் மாகாணத்திலுள்ள புரூக் ஹெவன் மிஸ்ஸிசிப்பியைச் சேர்ந்தவர் என விசாரணையின் மூலம் கண்டு பிடிக் கப்பட்டது.

இதையடுத்து, ஸ்டீவன் ஜோசப் கிறிஸ்தோபர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். இவருக்கான தண்டனை உறுதி செய்யப்பட்டால், அதிக பட்சமாக, 5 வருடகாலச் சிறைவாசமும், அபராதமும் விதிக்கப்படும் என நீதித்துறை தெரிவித்துள்ளது.

ஸ்டீவன் தனது இணையத்தள மிரட்டல் அறிவித்தலில், ''ஒபாமா பதவிப்பிரமாணம் எடுத்துக்கொண்டதும் அவரைச் சுட்டுக் கொலை செய்ய முடிவு கட்டிவிட்டேன். அவர் மீது எனக்குத் தனிப்பட்ட வெறுப்பு கிடையாது. நாட்டின் நலனுக்காக இதை நான் மேற்கொள்கிறேன். இதுவும் ஒரு தேசத் தொண்டுதான்'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

''ஒபாமா தமது அமைச்சரவையில் யூதர்களை அதிகளவில் நியமித்துள்ளார். இது நாட்டு நலன்களுக்கு நல்லதல்ல. இந்த அதிகப்படியான நியமனங்களை நான் அடியோடு வெறுக்கிறேன். யூதர்கள் தம் சுய நலன்களுக்காக, சர்வதேச மட்டத்தில் அமெரிக்காவின் பெயரையும், கௌரவத்தையும் களங்கப்படுத்தி விடுவார்கள். இதைத் தடுக்கவே இந்த முடிவு'' என்றும் விவரித்திருந்தார்.

# மும்பைத் தாக்குதல் பற்றி துப்புத்துலக்க இந்தியாவின் ஆதாரங்கள் உதவுகின்றன

## பாகிஸ்தான் அமைச்சர் குரேஷி தகவல்

இஸ்லாமாபாத், ஜன. 19

மும்பைத் தாக்குதல் தொடர்பாக இந்தியா அளித்துள்ள ஆவணங்களில் இடம்பெற்றுள்ள ஆதாரங்கள் துப்புத் துலக்க உதவிகரமாக உள்ளன என்றும் புலனாய்வின் முடிவுகள் முதலில் இந்தியாவுடன் பகிர்ந்துகொள்ளப்படும் என்றும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மகமூத் குரேஷி கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் மும்பையில் நடத்திய தாக்குதல்களில் சுமார் 200 பேர் பலியானார்கள். நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்தனர். இந்தத் தாக்குதல்களில் தொடர்புடைய பாகிஸ்தான் தீவிர வாதிகள் குறித்து கடந்த 5 ஆம் திகதி அந்த நாட்டிடம் ஆதாரத் தொகுப்பு ஆவணங்களை இந்தியா வழங்கியது.

இந்த ஆதாரம் போதுமானதாக இல்லை என்று கூறிவந்த பாகிஸ்தான் இப்போது அந்த நிலையை மாற்றிக்கொண்டு, புலன் விசாரணைக்கு உதவிகரமாக ஆதாரங்கள் உள்ளன என கூறியுள்ளது.

இந்த ஆதாரங்கள் குறித்து ஆய்வு செய்யும் மூவர் அடங்கிய பயங்கரவாத ஒழிப்புக் குழுவிடம் 10 நாள்களில் பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிக்கும்படி தாம் கூறியுள்ளார் என பாகிஸ்தான் உள்துறை அமைச்சகத் தலைவர் ரகுமான் மாலிக் தெரிவித்தார்.

இந்த நிலையில், அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஷா மகமூத் குரேஷி கூறுகையில், புலனாய்வு நியாயமாக நடைபெறும் என்றும், புலன்விசாரணை முடிவுகள் முதலில் இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளப்படும் என்றும் கூறினார்.

மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தானியரோ அல்லது அமைப்போ தொடர்புகொண்டுள்ளமை புலன்விசாரணையில் உறுதியாகும் பட்சத்தில் பாகிஸ்தான் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என்றும் குரேஷி குறிப்பிட்டார்.

மும்பையில் நடந்த தாக்குதலில் இந்தியர் மட்டும் இறக்கவில்லை. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களும் பலியாகி உள்ளனர். மும்பைச் சம்பவம் இந்தியாவுடன் மட்டும் நின்றுவிடவில்லை என்றும் குரேஷி கூறினார்.

# தீவிரவாதிகளின் தாக்குதலை முறியடிக்க அமெரிக்கா தயாராகவே உள்ளது

## ஜனாதிபதி புஷ் கூறுகிறார்

வாஷிங்டன், ஜன. 19

''சர்வதேச தீவிரவாத அமைப்புகள் அமெரிக்காவைத் தாக்குவதில் முனைப்பாக உள்ளன. அவற்றின் அச்சுறுத்தல்கள் நீடிக்கலாம். எனினும், எக்கோணத்திலும், அந்த அமைப்பு களின் தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டு விடும். இது விடயத்தில் அமெரிக்கா விழிப்பாகவும் தயாராகவும் உள்ளது''

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ், தமது பதவிக் காலம் (நாளை) 20 ஆம் திகதி முடிவுறவிருக்கும் தறுவாயில், இறுதியாக வியாழக்கிழமை வெளியுறவு அமைச்சக அதிகாரிகளின் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், வெளியுறவுக் கொள்கையில் அதிரடி மாற்றங்களைப் புகுத்தினேன். இந்திய-அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. அத்துடன் இந்தியாவுடனான வர்த்தக உறவுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''மத்திய கிழக்கிலுள்ள சிறிய ஜனநாயக நாடுகளுடனும், எமக்கு எதிரானவை எனக் கருதப்பட்டு வந்த நாடுகளுடனும், அமெரிக்கா இணைந்தே செயற்பட்டு வந்துள்ளது. அருகருகே உள்ள இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையே அமைதியை நிலை நாட்டுவதற்கும், பாதுகாப்பை பலப்படுத்துவதற்கும் நாம் பணியாற்றி வந்துள்ளோம்'' என்றும் அவர் கூறினார்.

''ஆசிய கண்டத்தில் நட்பு நாடுகளான யப்பான், தென்கொரியா, சீனா ஆகியவற்றுடனான ஒத்துழைப்பை நாம் பலப்படுத்திக் கொண்டோம். ஐரோப்பா கண்டத்தில், நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பை விஸ்தரிக்கும் பொருட்டு, அதில் புதிய ஜனநாயக நாடுகளையும் இணைத்துக் கொண்டோம். இவை அனைத்தும் எமது சாதனைகளாகும்'' என்றும் அவர் தெரிவித்தார்.




## காஷ்மீர் விவகாரத்தில் இந்தியா – பாக். சமரசமாக தீர்வுகளை எட்ட வேண்டும் பிரிட்டன் கோரிக்கை

'காஷ்மீர் விவகாரம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்குமிடையிலானது. இதில் பிரிட்டனுக்குத் தொடர்பில்லை. எனினும், இப்பிணக்குக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுகள் விரைவுபடுத்தப்படவேண்டுமென்பதே பிரிட்டனின் யோசனையாகும்.''


- இவ்வாறு பாகிஸ்தான் விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மிலிபேண்ட், பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

''உலகம் முழுவதும் இன்று தீவிரவாதம் பரவியுள்ளது. அது வேரறுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் தீவிரவாதம் உருவாவதற்கு வெவ்வேறுபட்ட காரணங்கள் உள்ளன. ஆனால், பாகிஸ்தானில் பரவியுள்ள தீவிரவாதம் [illegible] வித்தியாசமானது'' என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசைக் கண்டித்து வெள்ளியன்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டப் பேரணி

## கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு



சென்னை, ஜன.19

**ஈழத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசை கண்டித்து தமிழகம் முழுவதும் வரும் 23ஆம் திகதி மத்திய அரசு அலுவலகங்கள் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா.பாண்டியன் அறிவித்துள்ளார்.**

**தமிழர்களை விடுதலைப்புலிகள் கேடயமாக பயன்படுத்துகின்றனர் என்று ஜெயலலிதா கூறியிருப்பதை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டை ஜெயலலிதா மட்டுமின்றி வேறு சிலரும் கூறி வருகின்றனர் என்றும் கண்டனம் தெரிவித்தார்.**

சென்னையில் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தபோதே இவற்றைக் கூறினார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கை சென்ற வெளியுறவுத் துறை செயலர் சிவ்சங்கர் மேனன், இலங்கை ஜனாதிபதியுடன் போர்நிறுத்தம் பற்றிப் பேசவில்லை என்று கூறியிருக்கிறார்.

இதன் மூலம் போர்நிறுத்தம் செய்வதற்காக சிவ்சங்கர் மேனனை இலங்கைக்கு மத்திய அரசு அனுப்பவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா சிறந்த போர் தளபதியாக தெரிகிறார் என்றும், இந்திய - இலங்கை இடையேயான நட்புறவு என்றும் இல்லாத அளவுக்கு செழுமையாக உள்ளது என்றும் சிவ்சங்கர் மேனன் கூறியுள்ளார்.

முல்லைத்தீவு முற்றுகையிடப்பட்டு தமிழர்கள் மீது முப்படைகள் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அது பற்றி சிவ்சங்கர் மேனன் எதுவும் சொல்லாதமை தமிழக மக்களின் வேண்டுகோளை மத்திய அரசு மறுத்து விட்டது; தமிழர்களை அவமதித்து விட்டது என்பது உறுதியாகிறது. எனவே மத்திய அரசை கண்டித்து வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை தமிழகம் முழுவதும் மத்திய அரசு அலுவலகங்கள் முன்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது இலங்கை பிரச்சினையில் நமது கோரிக்கைகளை வலியுறுத்தும் பிரகடனம் வெளியிடப்படும். கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைப் பிரச்சினை குறித்து தாம் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து பட்ட தீர்மானம் இன்னமும் செயற்படுத்தப்படாமல் இருப்பதால் கருணாநிதி தனது தோல்வியை ஒப்புக் கொள்ள வேண்டும்.

இலங்கைப் பிரச்சினையில் தம்மால் ஏன் செயற்பட முடியாமல் போனது என்பது பற்றியும் கருணாநிதி விளக்கமளிக்க வேண்டும்.

### வீரமரணத்தைத் தழுவத் தயாராகுங்கள்!

ஈழத் தமிழருக்காக வீர மரணத்தை தழுவ தமிழ் இளைஞர்கள் தயாராக இருக்க வேண்டும். தர்ம யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டும் - என்று இந்திய கம்னிஸ்டு கட்சியின் தமிழ் மாநில செயலாளர் தா.பாண்டியன் திருமாவளவனை நேற்றுமுன்தினம் சந்தித்தபோது கூறியுள்ளார். அவர் அங்கு கூறியவை வருமாறு -

மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்று நம்பி நீங்கள் உண்ணாவிரதம் இருக்காதீர்கள். நல்ல முடிவை எடுங்கள். தமிழர்களுக்காக போராடும் உங்களைப் போன்ற நல்ல தோழர்களை இழக்க நாங்கள் விரும்பவில்லை. நாம் சாகப்பிறந்தவர்கள் அல்லர். தமிழ் இனத்தை அழிப்பவர்களை நசுக்கப்; பிறந்துள்ளோம். வாக்குச்சீட்டுகளைப் பெறுவதைவிட தமிழ் மக்களின் உயிரைக் காப்பதுதான் முக்கியம். இலங்கை பிரச்சினையில் எங்கள் பங்கு என்ன என்பதை, மாநில செயற்குழுவில் அறிவிக்க இருக்கிறோம். வீர மரணத்தை ஏற்க இளைஞர்கள் தயாராக இருக்க வேண்டும். தர்ம யுத்தம் வேண்டும். ஆகவே, நல்ல முடிவை எடுங்கள் - என்றார்.

எந்தத் தியாகமும் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம் எனக் கூறும் கருணாநிதி, என்ன தியாகம் செய்யப் போகிறார் என்பதை கூறினால் அந்த தியாகத்தை செய்வதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம்.

தமிழர்களை விடுதலைப்புலிகள் கேடயமாக பயன்படுத்துகின்றனர் என்று ஜெயலலிதா கூறியிருப்பதை ஏற்க முடியாது. இந்தக் குற்றச்சாட்டை ஜெயலலிதா மட்டுமின்றி வேறு சிலரும் கூறி வருகின்றனர். அதனை நிரூபிக்க நான்கு நடுநிலையாளர்களை இலங்கைக்கு அனுப்பி பார்வையிட மத்திய அரசும், இலங்கை அரசும் அனுமதி அளிக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் தமிழர்களை கேடயமாக பயன்படுத்துவது நிரூபிக்கப்பட்டால் நாங்கள் விடுதலைப் புலிகளை எதிர்க்கவும் தயாராக இருக்கிறோம்.

அப்பாவித் தமிழர்களை கொலை செய்யும் எண்ணம் சிங்கள இராணுவத்திற்கு இல்லை என்று ஜெயலலிதா கூறியிருப்பதும் தவறானது. தேர்தலுக்காக இலங்கைப் பிரச்சினையை யாரும் பயன்படுத்த கூடாது. அது மஹிந்த ராஜபக்ஷ அரசு, தமிழர்கள் மீது வீசும் குண்டுகளை விட கொடுமையானது - என்றார்.

# யாழைச் சேர்ந்த 20 பேர் ஐயப்பன் கோவிலில் கைது

திருவனந்தபுரம், ஜன. 19

கடவுச்சீட்டு இல்லாமல் சபரிமலைக்கு வந்த 20 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு நடந்த வெள்ளியன்று இலங்கையைச் சேர்ந்த 28 தமிழர்கள் சுவாமி கும்பிட வந்தனர். அவர்களில் 3 பேர் பெண்கள். இவர்கள் அனைவரிடமும் சன்னிதானம் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

இதில் 2 பெண்கள் உட்பட 20 பேரிடம் கடவுச்சீட்டு உள்ளிட்ட எந்த ஆவணங்களும் இல்லை. இதையடுத்து, பொலிஸார் அவர்களை சன்னிதானம் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

அப்போது, தாங்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் அங்கிருந்து சென்னை - திருச்சி வழியாக சபரிமலை வந்தனர் எனவும், கூட்டத்தில் கடவுச்சீட்டு தொலைந்து விடும் என்பதால் திருச்சியில் உள்ள நண்பர் வீட்டில் அவற்றை வைத்திருக்கின்றனர் எனவும் கூறினர்.

# விரைவில் கொழும்புக்கு பிரணாப்

## ஆற்காடு வீராசாமி நம்பிக்கை

செங்கல்பட்டு, ஜன. 19

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி, மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கை செல்வார் என்று அமைச்சர் ஆற்காடு வீராசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி உண்ணாவிரதமிருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவனைச் சந்தித்தபோதே அவர் இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

வெளியுறவு துறைச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் இலங்கை சென்றிருக்கிறார். அங்கு பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு, ஒரு கோடியே 70 லட்சம் ரூபா மதிப்பிலான மருந்து, உணவுப் பொருள்களை கொடுக்க அனுமதி பெற்றுள்ளார். இலங்கையில் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரிடம் முதல்வர் வலியுறுத்தியுள்ளார். மத்திய அரசை நம்பியிருப்போம் என்று முதல்வர் கூறியுள்ளார். மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி விரைவில் இலங்கை செல்வார் என்று நம்புவோம். இந்த பிரச்சினையில், அனைத்து கட்சியினரும் இணைந்து முடிவெடுப்போம். எனவே, திருமாவளவன் உண்ணாவிரதப் போராட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் - என்றார்.

# இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இருதரப்பினரும் பேச்சு நடத்த வேண்டும்

## பிரபாவைப் பிடிக்க முடியாது என்கிறார் இல.கணேசன்

கோவை, ஜன. 19

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண இரு தரப்பினரும் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அதன் முடிவுகள் அமுல்படுத்தப்படுவதை இந்திய அரசு காண்காணிக்க வேண்டும் - என்றும் தமிழக பா.ஜ.க. தலைவர் இல. கணேசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் கோவையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

இலங்கையில் லட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். எனவே இதனை அந்நாட்டின் உள்நாட்டு பிரச்சினையாகக் கருதாமல் இந்திய அரசு இதில் நேரடியாக தலையிட வேண்டும். இந்த சண்டையின் மூலம் பிரபாகரனைப் பிடிக்க முடியாது. ஆகையால் இரு தரப்பினரும் பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முயல வேண்டும்.



ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை முழுமையாகச் செயற்படுத்த இலங்கை அரசு முன்வர வேண்டும். தற்போதைய காங்கிரஸ் கூட்டணி அரசு இலங்கைப் பிரச்சினையில் போதிய அக்கறை காட்டவில்லை. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் 6 மாதங்களுக்குள் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப்போம் - என்றார்.

# இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாகாது

## வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அகமது பேட்டி

சென்னை. ஜன.19

இலங்கை தமிழர் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது - என்று மத்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் அகமது கூறியுள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய நிர்வாகிகள் கூட்டம் சென்னை மண்ணடியில் உள்ள மாநில தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடந்தது. அதில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோதே அவர் அதனைக் கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு-

இலங்கைச் தமிழர் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வு காண முடியாது. பேச்சு நடத்தித்தான் தீர்வு காண முடியும். அதற்குத் தேவையான முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருகிறது. வெளியுறவுத்துறை செயலாளர் சிவசங்கர் மேனன் இலங்கைக்கு சென்றுள்ளார். அவர் இந்தியா திரும்பிய பின்னரே, அவர் பேசிய விவரங்கள் குறித்து தெரிய வரும் - என்றார்.

முன்னதாக நடைபெற்ற தேசிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், இந்தியாவை சீர்குலைக்க முயற்சி செய்யும் தீவிரவாத சக்திகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், இலங்கையில் அப்பாவி தமிழர்கள் கொல்லப்படுவதைத் தடுத்த நிறுத்த மத்திய அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், பாலஸ்தீனம் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குலைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஈழத் தமிழர் பிரச்சினையில் நாட்டையே உலுக்கும் முடிவு!

## தேவை என்கிறார் ராமதாஸ்



காஞ்சிபுரம், ஜன. 18

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நாட்டையே உலுக்கும் முடிவை முதல்வர் கருணாநிதி எடுக்க வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் அறிவிக்க வேண்டும், தமிழர் பிரச்சினைக்கு அமைதி வழியில் பேச்சு நடத்த வேண்டும் என வலியுறுத்தி உண்ணாவிரதமிருக்கும் திருமாவளவனை நேற்றுமுன்தினம் ராமதாஸ் சந்தித்தார்.

உண்ணாவிரதப் பந்தலில் அவர் பேசிய போதே இதைத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசியவை வருமாறு-

இலங்கைத் தமிழர் பிரச்சினை 50 ஆண்டுகளாக நீடித்து வருகிறது எனவும், அதற்காக தொடர்ந்து பாடுபடப்போகிறேன் எனவும் முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார். அவர் மனம் வைத்தால் இப்பிரச்சினையை தீர்த்து விட முடியும்.

போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி அனைத்துக் கட்சி கூட்டம், சட்டப்பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியும், அனைத்துக் கட்சித் தலைவர்கள் தில்லி சென்று பிரதமரை நேரில் சந்தித்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. முதல்வர் கருணாநிதி மீது எங்களுக்கு நம்பிக்கை உள்ளது.

ஆனால் அவர் இந்திய அரசு மீது வைத்துள்ள நம்பிக்கைதான் வேடிக்கையாக உள்ளது. மத்திய அரசு செவிசாய்க்கப்போவதில்லை. வெளியுறவு அமைச்சரும் இலங்கை செல்லப் போவதில்லை. எனவே நாட்டையே உலுக்கும் முடிவை முதல்வர் எடுக்க வேண் டும். அதற்குப் பின்னால் நாங்கள் துணை நிற்போம்.

திருமாவளவன் தன்னை வருத்திக் கொண்டு காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார். என்னுடன் கலந்து பேசியே இம் முடிவை எடுத்தார்.

அவரது ரத்த அழுத்தம், ரத்தத்தின் சர்க்கரை அளவு குறைந்து கொண்டே வருகிறது. ஒடுக்கப் பட்ட மக்களின் [illegible] தலைவர். எனவே [illegible] அவர் கைவிட வேண்டும் - என்றார் ராமதாஸ்.

# மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்க தமிழக எம்.பிக்கள் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்கின்றார் திருமாவளவன்

வண்டலூர், ஜன.19

இலங்கைத் தமிழர் பிரச்சினையில், மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்காக தமிழக எம்.பி.க்கள் அனைவரும் ராஜினாமாச் செய்ய வேண்டும் - என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் வற்புறுத்தியுள்ளார்.

உண்ணாவிரத மேடையில் நேற்றுமுன்தினம் பேசியபோதே அவர் இதைக் கூறினார்.

பல கட்சிகள் இணைந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்ட முடிவு எடுக்க முடியாது என்பதால், நான் இந்த முடிவை எடுத்தேன்.

இதனால் தோழமைக் கட்சித் தலைவர்களை அவமதித்தேன் எனவும், புறக்கணித்து விட்டேன் எனவும் தயவு செய்து யாரும் கருத வேண்டாம்.

இந்த முடிவு எடுத்ததற்காக, டாக்டர் ராமதாஸ், அமைச்சர் ஆற்காடு வீராசாமி ஆகியோர் முன்னிலையில் வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால், எனக்கு இதைத் தவிர வேறு வழி இல்லை. ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்துவதற்காக, இந்த முடிவை எடுத்[illegible] இலங்கையில் போரை நிறுத்து [illegible] வைத்து முதல்வர் மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும்.

இந்திய அரசின் வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனனின் கொழும்புப் பயணம், போர் நிறுத்தத்திற்கு வழிவகுக்கும் என்று நம்ப முடியவில்லை. அழிவின் விளிம்பில் நிற்கும் 5 லட்சம் அப்பாவித் தமிழர்களைப் பாதுகாக்க போர் நிறுத்த நடவடிக்கை எடுக்காமல், அம்மக்களை இழிவுபடுத்தும் வகையில் ஒன்றே முக்கால் கோடி ரூபா மதிப்பில் உணவுப் பொருள்கள் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

மேலும் இந்தியா-இலங்கை உறவு மிக ஆழமாகவும் சிறப்பாகவும் உள்ளது என பூரிப்பு அடைந்திருக்கிறார். இவ்வாறு ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்வுகளை மதிக்காத மத்திய அரசின் போக்கில் மாற்றம் கொண்டுவர, தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து அழுத்தம் கொண்டுவர வேண்டும்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி முதல்வர் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலக வேண்டும். அத்துடன், தமிழினத்துக்கு எதிரான சக்திகளை ஓரம் கட்டி, மரியாதைக்குரிய தா.பாண்டியன், வைகோ ஆகியோர் முதல்வர் தலைமையில் ஓரணியில் திரள வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 38ஆவது முறையாக ரஞ்சி கோப்பையை கைப்பற்றி அசத்தியது மும்பை அணி

ஹைதராபாத்,

ரஞ்சி கோப்பை சம்பியன் பட்டத்தை 38ஆவது முறையாக மும்பை அணி கைப்பற்றியது. உத்தரபிரதேச அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில், மும்பை 243 ஒட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை எட்டியது. உள்நாட்டு கிரிக்கெட் தொடர்களில் ஒன்றான ரஞ்சி கோப்பை தொடர் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடந்தது. இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற மும்பை, உத்தரபிரதேச அணிகள் ஹைதராபாத்தில் மோதின. முதல் இன்னிங்ஸில் மும்பை 402, உத்தரபிரதேசம் 245 ஓட்டங்கள் எடுத்தன. தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடிய மும்பை அணி, 367 ஓட்டங்கள் குவித்தது. இதன் மூலம் உத்தரபிரதேச அணிக்கு ஒரே நாளில் 525 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது மும்பை.

நேற்றுமுன்தினம் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. சவாலான இலக்கை நோக்கி களமிறங்கிய உத்தரபிரதேச அணிக்கு, ஆரம்ப வீரர்களான சுக்லா (11), சீனிவஸ்தவா (7) ஏமாற்றம் அளித்தனர். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட முன்னணி வீரர் ரெய்னா (10) இந்த முறையும் சோபிக்கவில்லை.

அடுத்து வந்த அணித்தலைவர் கைப், பொறுப்புடன் ஆடி ஓட்டங்கள் சேர்த்தார். இவருடன் இணைந்த புவனேஷ்வர் குமார் சிறப்பாக ஆட அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்ந்தது. இந்நிலையில் பவார் சுழலில் கைப் (72) வெளியேறினார். நடுத்தர வரிசையில் சாவ்லா (3), பிரவீண் குமார் (0) ஓட்டங்கள் சேர்க்கத் தவறினர். மறுமுனையில் 14 பவுண்டரிகளுடன் 80 ஓட்டங்கள் குவித்த புவனேஷ்வர் குமார் ஆட்டமிழந்தார். குப்தா (25), அமீர்கான் (43) ஓரளவு ஓட்டங்கள் சேர்க்க, அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த உத்தர பிரதேச அணி, 281 ஓட்டங்கள் சேர்த்தது. மும்பை தரப்பில் குல்கர்னி 5, பவார் 3 விக்கெட் வீழ்த்தினர்.

இதன் மூலம் மும்பை அணி, 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் உத்தரபிரதேசத்தை வீழ்த்தி ரஞ்சி கோப்பையை 38ஆவது முறையாக கைப்பற்றியது. சென்ற ஆண்டு ரஞ்சி கோப்பை இறுதிப் போட்டிக்கு முன்னேறிய போதும், டில்லி அணியிடம் தோல்வி அடைந்த உத்தர பிரதேச அணி, இந்த முறையும் சாதிக்க தவறியது.

உத்தரபிரதேச அணியை 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணி வென்று 38வது முறையாக கோப்பையை வென்றது.

இதுவரை 75 முறை ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடர் நடந்துள்ளதாகவும், இதில் 38 முறை மும்பை அணி வெற்றி பெற்று கோப்பை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



தொடர் வெற்றிக்குப்பின் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளித்த சச்சின் டெண்டுல்கர் கூறியவை வருமாறு:-

''இந்த வெற்றி தங்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவதாகவும், இந்த வெற்றிக்கு அணி வீரர்களின் ஒட்டுமொத்த பங்களிப்பே முக்கிய காரணம். இந்த வெற்றியை மும்பையில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலியானவர்களுக்கு அர்ப்பணிப்போம்'' - என்று கூறினார்.

## கங்குலிக்குத் தங்கத் துடுப்பு

கொல்கத்தா, ஜன. 19

இந்தியக் கிரிக்கெட்டில் பல மகத்தான் சாதனைகள் படைத்த் கங்குலிக்கு தங்கத் துடுப்பு மட்டை பரிசாக நேற்று வழங்கப்பட்டது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் முன் னாள் தலைவர் செளரவ் கங்குலி, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் முடிவில் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றார். அவரது தலைமையில் பல சாதனைகள் படைத்த இந்திய அணி அந்நிய மண்ணிலும் தனது வெற்றியைப் பதிவு செய்யத்தொடங்கியது. இது தவிர, வீரர்களின் திறமையை வெளிக்கொண்டு வருவதில் கங்குலிக்கு நிகர்யாரும் கிடை யாது என்றே சொல்லலாம்.

ஒருநாள் கிரிக்கெட்டில் சச்சினுடன் ஆரம்ப வீரராக விளையாடி வந்த கங்குலி, சேவாக்கின் அதிரடி ஆட்டத்தைப் பார்த்து தனது இடத்தை அவருக்கு விட்டுக்கொடுத்தார். இப்படி பல்வேறு சாதனைகள் படைத்த கங்குலிக்கு, மேற்குவங்கக் கிரிக்கெட் சங்கம் சார்பில் நேற்றுப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இந்த விழாவில் இந்தியப் பணத்தில் 25 லட்சம் ரூபா மதிப்பிலான தங்கத் துடுப்பு மட்டை கங்குலிக்குப் பரிசாக வழங்கப்பட்டது.

இந்தத் துடுப்பு மட்டையில் அவரது கிரிக்கெட் சாதனைகள் அனைத்தும் இடம் பெற்றுள்ளன.

இதுதவிர, கங்குலி குறித்து குறும்படம் வெளியிடப்படுகிறது. சிறுவயது முதல் ஓய்வுவரை அவரது பல சாதனைகள் இந்த படத்தில் இடம்பெற்றிருக்கும். இந்தியக் கிரிக்கெட் சபை நிர்வாகிகள், இப் போதைய வீரர்கள் மற்றும் முன்னாள் வீரர் கள் எனப் பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். ஜக்மோகன் டால்மியா நடத்திய இந்தப் விழாவில் மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி, சிறப்பு விருந்தினரா கக் கலந்து கொண்டார்.




# இரண்டாவது போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி

அவுஸ்திரேலிய மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கிடையே நேற்று நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 5 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய தென்னா பிரிக்க அணி களத் துடுப்பை தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் மார்ஷ் 78 ஓட்டங்களையும், அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் 64 ஓட்டங்களையும் எடுத்தனர்.

தென்னாபிரிக்கா சார்பில் பந்துவீச்சில் நிற்னி 3 விக்கெட்டுகளையும், கலிஸ், ஸ்ரெய்ன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 244 ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது. அந்த அணி சார்பில் கலிஸ் 72 ஓட்டங்களை எடுத்தார். முடிவில் அவுஸ்திரேலியா 5 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஆட்ட நாயகனாக ஆஸி. வீரர் மார்ஷ் தெரிவானார். இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் இரு அணிகளும் 1 - 1 என்ற அடிப்படையில் சமநிலை வகிக்கின்றன.

# இலங்கை வருகின்ற இந்திய அணியில் சகீர்கான் - இஷாந் சர்மாவுக்கு ஓய்வு

மும்பை, ஜன. 19

இலங்கை செல்லும் இந்தியக் கிரிக்கெட் அணியில் சகீர்கான், இஷாந்த் சர்மாவுக்கு ஓய்வு அளிக்கப்படும் என தெரிகிறது. இதனால் ரஞ்சிக் கோப்பை போட்டியில் அசத்திய இளம் வீரர்களுக்கு வாய்ப்புக் கிடைக்குமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

நியூஸிலாந்துத் தொடருக்கு முன்பாக இலங்கையில் ஐந்து ஒருநாள் மற்றும் ஒருருவன்ரி - 20 போட்டியில் பங்கேற்க இந்திய அணி முடிவு செய்துள்ளது.

இங்கிலாந்து தொடருக்கு பிறகு இஷாந்த் சர்மா, 22 நாள்கள் ஓய்வில் இருந்து வருகிறார். ஆனால் சகீர்கானுக்கு அதுவும் இல்லை. தனது மும்பை அணியின் ரஞ்சிக்கோப்பை தொடரில் பங்கேற்றார்.

வேகப்பந்து வீச்சில் மன்பிரீத் கோனி, சித்தார்த் திரிவேதி, அசோக் டிண்டா, பிரதீப் சங்வான் மற்றும் அனுபவ வீரர் பாலாஜி ஆகியோர் சர்வதேச வாய்ப்புகளுக்கான வரிசையில் காத்திருக்கிறார்கள். பாலாஜி கடந்த 7 ரஞ்சி போட்டியில் 36 விக்கெட்டுகள் சாய்த்து இருக்கிறார். மித வேகப் பந்து வீச்சில் மும்பை வீரர் குல்கர்னி 9 போட்டிகளில் 42 விக்கெட் வீழ்த்தியுள் ளார். இவர்களுடன் முனாப் படேல், ஆர்.பி.சிங்., அகார்கர், பதான் சகோதரர்கள் என தாக்குதலுக்கு தயாராக இருக்கி றார்கள்.

சுழல் பந்தில் பிரக்யான் ஓஜா, ரவீந்திர ஜடேஜா, நந்தா, பியுஸ் சாவ்லா அனைவரும் சமீபத்திய ரஞ்சிக்கோப்பையில் தொடர்ந்து அசத்தினார்கள். மும்பையின் நடுவரிசை ஆர்டர் வீரர் ரகானே கடந்த 10 ரஞ்சி போட்டிகளில் சராசரி 68 ஆக வைத்துள்ளார்.

துடுப்பாட்டத்தில் சவுராஷ்டிரா அணியின் புஜாரா 900இற்கும் அதிகமாக ஓட்டங்களைக் குவித்து, 82.36 சராசரியை கொண்டு தேர்வாளர்களின் கவனத்தை ஈர்த்து, தமிழகத்தின் பத்ரிநாத்துடன் போட்டியிடுகிறார். மற்றொரு சகலதுறை ஆட்டக்காரான ரவீந்திர ஜடேஜா, துடுப்பாட்டத்தில் 67.18 ஓட்டங்கள் சராசரியும், பந்துவீச்சில் 42 விக்கெட்டுகளையும் சாய்த்து இருக்கிறார்.

இவர்கள் தவிர அணியின் ஆரம்ப ஆட்டக்காரான காம்பிர், சேவக்கிற்கு வழக்கம் போல் உறுதி. பிறகு சச்சின், யுவராஜ் சிங், ரோகித் சர்மா, விராத் கோஹ்லி, சுரேஷ் ரெய்னா மற்றும் கேப்டன் டோனி என எட்டு சிறந்த துடுப்பாட்டக்காரர்களுடன் இந்தியா களமிறங்குவது உறுதி. விக்கெட் காப்பாளர் டோனி.

இந்திய அணி விவரம்:- டோனி (அணித்தலைவர்), சேவக், கம்பிர், சச்சின், யுவராஜ், ரெய்னா, ரோகித் சர்மா, விராத் கோஹ்லி, ஹர்பஜன் சிங், அமித் மிஸ்ரா, முனாப் படேல், அசோக் டிண்டா, ஆர்.பி. சிங்., அல்லது பாலாஜி, பிரதீப் சங்வான் அல்லது சித்தார்த் திரிவேதி. என புதுமுக வீரர்களும் அணியில் இடம்பெற்றுள்ளனர்.

# ஐ.சி.சியின் தரப்படுத்தலுக்கு கபில்தேவ் கடும் கண்டனம்

சர்வதேசக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள சாதனையாளர்கள் பட்டியல் 'டக்வொர்த் - லூயிஸ்' விதியைப்போல குளறுபடியானது என்று இந்திய அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் கூறியுள்ளார்.

உலகக் கிரிக்கெட்டில் இதுவரை நடந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளின் அடிப்படையில் சாதனையாளர்கள் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சமீபத்தில் வெளியிட்டது. டெஸ்ட் சாதனையாளர் பட்டியலில் கவாஸ்கருக்கு 20ஆவது இடமும், சச்சினுக்கு 26ஆவது இடமும் வழங்கப்பட்டது. ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள், அதிக சதம் அடித்த சச்சினுக்கு 12ஆவது இடமே கிடைத்தது. ஐ.சி.சியின் இந்த அறிவிப்பு கிரிக்கெட் உலகில் பெரும் புயலை கிளப்பியது.

இந்நிலையில் ஐ.சி.சியின் இந்த அறிவிப்புக் குறித்து கபில்தேவ் கூறியவை வருமாறு:-

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின்போது மழை உட்பட ஏதாவது காரணங்களுக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டால் 'டக்வொர்த்-லூயிஸ்' விதிப்படி வெற்றி தோல்வி நிர்ண யிக்கப்படும். இந்த விதி எப்படி கணக்கிடப்படுகிறது என்று இதுவரை எந்த ஒரு வீரருக்கும் தெரியாது. ஒரு பந்தில் அதிகபட்சம் 6 ஓட்டங்கள் அடிக்க முடியும். ஆனால், இந்த விதியில் ஒரு பந்தில் 20 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்று நிர்ணயிப்பார்கள்.

இதே போன்ற ஒருநிலையையே ஐ.சி.சி. தற்போது அரங்கேற்றியுள்ளது. கவாஸ்கர், டிராவிட், அக்ரம், டென்னிஸ் லில்லி ஆகியோருக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை. சச்சினுக்கு பந்து வீசுவது மிகவும் கடினம் என்று எல்லா முன்னணி பந்து வீச்சாளர்களும் கூறியுள்ளனர். பிராட்மன் கூட என்னைப் போன்ற சிறந்த வீரர் சச்சின் என்று கூறியுள்ளார். கிரிக் கெட்டில் பிராட்மனுக்கு நிகரானவர் யாரும் இல்லை. எனினும் அவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் தகுதி சச்சினுக்கு மட்டுமே உள்ளது.

- இவ்வாறு கபில் தேவ் கூறினார்.

# மெண்டிஸ் - முரளியைச் சமாளிக்க பாகிஸ்தான் வீரர்கள் புதிய வியூகம்

இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளர்களான அஜந்த மெண்டிஸ், முரளியின் பந்துவீச்சைச் சமாளிக்க பாகிஸ்தானிடம் வியூகம் இருப்பதாக அந்த அணியின் அணித்தலைவர் ஷொயிப் மலிக் கூறியுள்ளார்.

இலங்கைக் கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சென்று டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. முதலில் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்றுவிட்டு பின்னர் நாடு திரும்பும் இலங்கை அணி இந்தியாவுடன் ஒருநாள் போட்டிகளில் விளையாடி விட்டு மீண்டும் பாகிஸ்தானில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுகிறது.

இந்தத் தொடருக்கு பாகிஸ்தான் அணியின் தலைவராக ஷொயிப் மலிக் நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் அந்த அணியின் முக்கிய பந்து வீச்சாளராக விளங்குகிறார். அவருடைய மாயப்பந்து வீச்சு சர்வதேச ஆட்டக் காரர்களை திணற வைத்து வருகிறது.

இந்நிலையில் மெண்டிஸின் பந்து வீச்சைச் சமாளிக்க பாகிஸ்தானிடம் வியூகம் இருப்பதாக ஷொயிப் மலிக் கூறியுள்ளார். அஜந்த மெண்டிஸ் மற்றும் முரளிதரன் போன்றவர்களின் பந்து வீச்சை எப்படிச் சமாளிப்பது என்று விரிவாக யோசித்து அதற்கேற்ற உத்திகளை உருவாக்கியிருக்கிறார்கள் என மலிக் கூறியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசுவமடுப் பகுதியில் நேற்று மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட அகோரச் ஷெல் தாக்குதலில் காயமுற்றவர்களில் சிலரைப் படங்களில் காணலாம்.

# பிரபாகரன் வெளிநாட்டிலென்று? சந்தேகிக்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு, ஜன.19

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏற்கனவே முல்லைத்தீவிலிருந்து தப்பி வேறு நாட்டிற்குச் சென்றிருப்பார் என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். வெளிநாட்டுச் செய்தி ஏஜென்சிகளின் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

''பிரபாகரன் தனது குடும்பத்தை நேசிப்பவர். நல்ல உணவு உண்பதை விரும்புபவர். இதன் காரணமாக அவர் இராணுவம் தனக்கு அருகில் வரும்வரை காத்திருக்கமாட்டார். கடல்வழியாகத் தப்பிச் சென்றிருப்பார்'' என சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

''பிரபாகரன் தனது போராளிகளை வற்புறுத்துவது போன்று தான் சயனைட் உட்கொள்ளமாட்டார். அதேவேளை, ஈராக்கின் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைன் போன்று பிடிபடவும் மாட்டார்'' - என்று பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும் பிரபாகரன் எங்கு சென்றிருப்பார் என்பதை அவர் கூறவில்லை.

## புதன்கிழமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை மறுதினம் புதன்கிழமை கொழும்பிற்கு வருகை தரவுள்ள அகாஷி ஞாயிற்றுக் கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் உட்பட அதன் உறுப்பினர்களை சந்திப்பதற்கு அகாஷி திட்டமிட்டுள்ளார் எனவும் ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களையும் சந்திப்பதற்கு அகாஷி ஆர்வமாகவுள்ளார். தற்போது இந்தியாவில் உள்ள கட்சியின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா சம்பந்தனிடம் இதுகுறித்து அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(சி)

## எம்.ரீவி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்காக விசேட குழுவொன்றை நியமித்துள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைவர் முத்து பண்டா ஆங்கில வார இதழ் ஒன்றுக்குத் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

எனினும் அவர் இதற்கான காரணங்களை வெளியிடவில்லை.

இதேவேளை, எம்.ரி.வி. கலையகத்தின் மீது இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக செவான், சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி தொடர்பாகவே அவரிடம் வாக்குமூலம் பெறத் தீர்மானித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

செவான் டானியலிடம் வாக்குமூலம் பெறுவதற்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் பன்னிப்பிட்டிய தெபானமாவிற்குச் சென்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டவர்களில் இருவர் சிவிலியன்கள் என்றும் இந்த சம்பவத்தில் மற்றுமொரு சிவிலியன் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் எதரிவித்தனர். (அ-சி)

## விசுவமடுவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரதிகரன் (வயது - 15), திபாகரன் (வயது - 15), ச.தியாகராசா (வயது - 56), கருணாநிதி ரஞ்சினிதேவி (வயது - 46), சசிதரன் (வயது - 26), கதிர்காமநாதன் (வயது - 37), இராமநாதன் (வயது - 71), நடராசா (வயது - 76), பவளராணி (வயது - 58), இரட்ணராசா (வயது - 46), வினிதா (வயது - 35), வினோகௌரி (வயது - 48), இராஜ்குமரன் (வயது - 47), சுதர்சினி (வயது - 37), சிலம்பரசன் (வயது - 19), சசிகுமார் (வயது - 26), கயல்விழி (வயது 24), இராமலிங்கம் (வயது - 53), சஞ்ஜீவன் (வயது - 19), சிவனம்மா (வயது - 64), விஜிகரன் விந்துஜா (வயது - 21), ஜெனி ரோஸ் (வயது - 31), கண்ணகியம்மா (வயது - 60), சதீஸ் (வயது - 28), நல்லதம்பி இராசதுரை (வயது - 70), தங்கராசா கணேஸ் (வயது - 09), துரைராசா தங்கராசா (வயது - 37) ஆகியோர் காயமடைந்துள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டது.

## ஊடக அடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.க. இன்று பிற்பகல் 2 மணியளவில் காலி நகரில் பாரிய ஆரப்பாட்டம் ஒன்றை நடத்துகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட எம்.பி. வஜிர அபயவர்தனவே இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்.

இதில் ஐ.தே.க. எம்.பிக்கள், கட்சியின் முக்கிய பிரமுகர்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் உட்படப் பெருந்திரளானோர் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று ஜே.வி.பியும் ஊடக அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நுகேகொடயில் இன்று பிற்பகல் 3 மணிக்கு பொதுக்கூட்டம் ஒன்றை நடத்துகின்றது.

இக்கூட்டத்தில் ஜே.வி.பி., தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையம், பத்திரிகையாளர் சங்கங்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் போன்றவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர் என்று ஜே.வி.பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ-சி)

## போர் நிறுத்தம் குறித்து சிவ்சங்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.

அமைச்சர் போகொல்லாகம நேற்று மல்வத்தை அஸ்கிரிய பீடங்களின் இரு மகாநாயக்கர்களையும் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றபின்னர் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபொழுதே இதனைக் கூறினார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு-

இந்நாட்டின் பயங்கரவாதம் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்தும் தேவையான தீர்வையும் பெற்றுக் கொள்வதற்கு இந்நாட்டின் ஜனாதிபதிக்கு போதிய தைரியமும் ஆர்வமும் உண்டு என்பதை இந்திய வெளியுறவுச் செயலாளருக்கு நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். இந்தியாவும் இது தொடர்பாக நல்லெண்ணத்தையும் விசுவாசத்தையும் கொண்டிருப்பதால் அந்நாட்டில் இருந்து எவ்வித அழுத்தங்களும் இலங்கைக்கு ஏற்படவில்லை.

இலங்கையின் வரலாற்றை நோக்கிப் பார்த்தால் முதல் முறையாக இந்நாட்டுக்கு ஆகக்கூடுதலான வெளிநாட்டுத் தலைவர்கள் கடந்த ஆண்டிலேயே வந்திருக்கின்றனர். பயங்கரவாதத்தை நாம் தோற்கடிக்க அத்தகைய நாடுகளில் இருந்தும் எமக்கு பெரும் ஒத்துழைப்புக்கள் கிடைத்தன. அத்துடன் இந்த வருடத்தில் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு இலங்கையில் பயங்கரவாதம் தொடர்பாக வெளிநாடுகளில் தெளிவான விளக்கத்தை அளிக்கும் வகையில் நாம் எடுத்த நடவடிக்கை காரணமாக அந்த நாடுகள் எம்மைப் பாராட்டியுள்ளன - என்றார்.

(அ-சி)

## உடல் நிலை மிகவும் பாதிப்புற்றதால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாள்களாக உண்ணாநிலைப் போராட்டத்தினை மேற்கொண்டிருந்ததால் அவரின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியது.

நேற்று ஞாயிறு மாலை 5 மணிக்குச் சற்றுப் பின்னர்தான் மயக்கநிலையை நெருங்கியதால் அவரை அருகில் நிறுத்தப்பட்டிருந்த அவசர ஊர்திக்கு மருத்துவர்கள் அழைத்துச்சென்று பரிசோதனை செய்தனர்.

திருமாவளவனுக்கு மயக்கம் ஏற்பட்டதை அறிந்த கட்சித் தொண்டர்கள் அவர் போராட்டத்தினை கைவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். முன்னதாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் இரண்டு தடவை நடைபெற்றது.

கட்சியின் பொதுச் செயலாளர் இரவிக்குமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திருமாவளவன் போராட்டத்தைக் கைவிட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருமாவளவனின் தாயார் பெரியம்மாவும் மேடைக்கு வந்து உண்ணாவிரதப் போராட்டத்தினை கைவிடும்படி கேட்டுக் கொண்டார். அதனைக் கேட்ட திருமாவளவன் இலங்கைத் தமிழர்களுக்காத் தமிழகமே செயலிழக்கும் அளவுக்கு நடத்தப்படும் போராட்டத்துக்கு முதலமைச்சர் கலைஞர் மற்றும் தமிழ் இன உணர்வு கொண்ட அனைத்துக் கட்சிகளின் ஆதரவை யும் திரட்டுவதாகவும் இலங்கைச் சிக்கல் தொடர்பாக விவாதிக்க அடுத்த இரண்டு நாள்களில் முதல்வர் கலைஞர் மூலம் அனைத்துக்கட்சிக் கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு செய்வதாகவும் மருத்துவர் இராமதாஸ் உறுதியளித்ததாலேயே போராட்டத்தை கைவிடுவேன் என்று கூறினார்.

திருமாவளவனின் கோரிக்கையை மருத்துவர் இராமதாஸ் ஏற்றுக்கொண்டதை அடுத்து உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுவதாக திருமாவளவன் அறிவித்தார்.

தொடர்ந்து திருமாவளவனுக்குப் பழச்சாறு கொடுத்து போராட்டத்தை மருத்துவர் இராமதாஸ் முடித்து வைத்தார். திருமாவளவனுடன் சேர்ந்து உண்ணாவிரதம் இருந்த கட்சியின் மற்றய தொண்டர்களும் போராட்டத்தை நேற்று மாலையுடன் முடித்துக்கொண்டனர். (அ)


நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
பொருளியல்
திரு. B.கஜீதரன்
2 pm
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
அளவையியல்
திரு.கமல் (7.15)
அரசியல்
திரு.ஸ்ரீரங்கநாத் (7.15)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

ஆரம்பமாகிவிட்டது
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
(Mon, Tue, Thur)
தமிழ்: திரு.குழந்தை 9 am
இந்து நாகரிகம்
திரு.N.T.தரன் 8am
புவியியல்
திரு.சுரேன் 10am
நாடகமும் அரங்கியலும்
திரு.மயூரன் 11am
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

IDM
Nation's ICT Academy
Pre University College
Affiliated University College

VACANCIES

1 - Receptionist
2 - Instructor

Applications are invited from experienced dynamic professional with good English Speaking knowledge and personality.

Candidates Should be between ages of 20 and 30. Excellent remuneration packages are offered.

Walk-in interviews between 10.00am to 2.00pm Sunday 25th January 2009.

Please apply with CV, letters of reference and recent photograph, photo copies of the Educational Certificates and character from Gramasevaga.

Branch Co-ordinator
IDM Affiliated University College
Dutch Road,
Chavakachcheri.

Scc யின் கணினி பயிற்சி நெறிகள்
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN VISUAL FOXPRO
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN C++
DIPLOMA IN INTERNET E-MAIL
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
DIPLOMA IN WEB DESIGNING
3000/= உடன் இலவச பயிற்சியை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம்
பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நெறிகள்
GIT (G.C.E. A/L),
ICT (Grade10,11)
English & Tamil Medium
Course Fees (Monthly 300/=)
ஆசிரியர் :- திரு.சி.பிரணவன்
Kids Programming (Grade 2-10)
Online Classes
குறைந்த கட்டணம்
கூடிய நேர செய்முறைப்பயிற்சி
அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்
அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சான்றிதழ்.
பயிற்சி ஆரம்பம் 23.01.2009
24.01.2009
Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P: 021 2225170

WALK-IN - INTERVIEW
இணையத்தளம் மற்றும் அது சார்ந்த
தகவல் தொழில்நுட்பப் பணிகளில்
அனுபவமுடையவர்கள் தேவை.
பயிலுநர்களும் வரவேற்கப்படுகின்றனர்.
க.பொ.த. உயர்தரத்துடன் தகவல் தொழில்நுட்பத் துறையில்
M.S. Office / DTP / WEB Designing & Hosting
ஆகியவற்றில் அனுபவம் / அறிவுடையோராகவும் இருப்பின் -
இன்றே வாருங்கள்! சாதனையாளர் அணியில் நீங்களும்
இணைந்து கொள்ளுங்கள்!!
தகைமை மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன்
இன்று மு.ப. 10 மணிக்கு நேரில் வரவும்.
இரவில் பணியாற்ற விரும்புவோருக்கு
முன்னுரிமை வழங்கப்படும்.
கொழும்பில் பணியாற்றவும் வாய்ப்பு உண்டு.
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18 01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org